13. வயது.- 2014, ஓகத்து 31 ஆந் திகதியன்று-

ஆண்டுகள் :---- மாதங்கள் :---- நாட்கள் :----.

14. விவாகமானவரா/விவாகமாகாதவரா ? :----.

15. பால் :----.

16. உயரம் :

அடி ---- அங்குலம் ----.

17. க. பொ. த. (சா. த.) பரீட்சை :----.

| ஆண்டு | சுட்டிலக்கம் | சித்தியடைந்த பாடங்கள் | பெற்ற தரங்கள் |
|---|---|---|---|
| | | | |

18. க. பொ. த. (உ. த.) பரீட்சை :----.

| ஆண்டு | சுட்டிலக்கம் | சித்தியடைந்த பாடங்கள் | பெற்ற தரங்கள் |
|---|---|---|---|
| | | | |

19. பதவிக்குரிய எவையேனும் விசேட தகைமைகள் :----. (தொழில்நுட்பம், தொழிற்பயிற்சி அனுபவம் முதலியன)

20. விளையாட்டுத் துறையில் விசேட சாதனைகள் பற்றிய விபரம் : ----.

21. பாடசாலையில் அல்லது வெளி ஒழுங்கமைப்புகளில் குறிப்பிடத்தக்க வேறு சாதனைகள் :----.

22. ஆயுதப்படைகளுக்கு அல்லது பொலிஸ் சேவைக்கு இதற்கு முன்னர் விண்ணப்பித்திருந்தால் விபரங்கள் தரவும் :----.

23. நீர் குடியியல் அல்லது இராணுவ நீதிமன்றமொன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவரா ? :----.

24. நற்சாட்சிப்பத்திரங்கள் பற்றிய விவரங்கள் :

| பெயர் | பதவி | நிரந்தர முகவரி |
|---|---|---|
| | | |

25. **விண்ணப்பக்காரரால் கையொப்பமிட வேண்டிய வெளிப்படுத்துகை :**

மேலேயுள்ள வினாக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள விடைகள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் சரியானவை என என் மீது ஆணையாக வெளிப்படுத்துகிறேன். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப் பட்ட இலங்கை நிரந்தர வான்படையில் வான்படை வீரராக தெரிவுசெய்யப்படும் விண்ணபக்காரர்கள் தொடர்பில் கடைப்பிடிக்கப்படும் நடவடிக்கை முறையையும் அவற்றுக்குரிய விதிகளையும் நான் வாசித்து விளங்கிக்கொண்டுள்ளேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

8-578

## இலங்கை பொலிஸ் திணைக்களம்

பொலிஸ் கொஸ்தாபல் பதவி

இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் பொலிஸ் பயிலுநர் கொஸ்தாபல் பதவிக்கு இலங்கைப் பிரைசகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் "பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு), பயிலுனர் ஆட்சேர்ப்பு அலுவலகம், இல. 375, 1 ஆம் மாடி, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு 06" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடிதத்தின் இடது பக்க மேல் மூலையில் தங்களால் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரினைக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2014.10.15 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பப்படல் வேண்டும். தாமதித்துப் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் பொலிஸ் திணைக்களத்தினால் விண்ணப்பங்கள் வழங்கப்பட மாட்டாது.

3. **சம்பள அளவுத்திட்டம்**.- ரூபா 1,71,360 - 7 X 1,740 - 10 X 2,160 - 17 X 2,880 - ரூபா 2,54,100.

மேலும், அரச உத்தியோகத்தர்களுக்கான வாழ்க்கைச் செலவு கொடுப்பனவுக்கும் அத்துடன் 12.12.2011 ஆந் திகதிய 31/11 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றுநிருபத்துக்கு அமைவான கொடுப்பனவு களுக்கும் உரித்துடையவராவர். மேற்குறிப்பிடப்பட்ட சம்பள அளவுத் திட்டத்திற்கு மேலதிகமாக கீழ்க்காணும் கொடுப்பனவுகள் மாதந்தோறும் வழங்கப்படும்.

(அ) கடினக் கொடுப்பனவுகள் : 2,000 ரூபா ;

(ஆ) இணைந்த கொடுப்பனவுகள் :

(1) வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் சேவையின் பொருட்டு 10,500 ரூபா ;

(2) ஏனைய பிரதேசங்களில் சேவையின் பொருட்டு 8,400 ரூபா.

(இ) இலவச போக்குவரத்து வசதி ;

(ஈ) உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளி நாடுகளிலும் வைத்திய வசதிகள் பொருட்டு) பண உதவிகள் வழங்கப்படும் ;

(உ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும் ;

(ஊ) விளையாட்டுத் திறன்களை வளர்த்துக்கொள்ள உதவிகள் வழங்கப்படும் ;

(எ) கடமைகளுக்கான பிரயாணச் செலவுகள் கடினமான வேலை களுக்காகவும் அத்துடன் திறமையாக கடமைகளைச் செய்வதற் காகவும் வெகுமதிகளாகப் பணம் வழங்கப்படும்.

4. **தேவையான அடிப்படைத் தகைமைகள் :**

(அ) வயதெல்லை.- வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியில் 2014.10.15 ஆந் திகதியன்று 18-28 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். ஏற்கனவே பொலிஸ் திணைக்களத்தில் சேவை செய்யும் பாதுகாப்பு உதவி உத்தியோகத்தர்கள் (SA) விண்ணப்ப முடிவுத் திகதியன்று 30 வயதிற்கு உட்பட்டவராக இருந்தால் அவர் களும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.

(ஆ) கல்வித் தகைமைகள்.- க.பொ. த. (சா.தர) பரீட்சையில் கணிதம்/ தாய்மொழி உட்பட இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் குறைந்தது 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இரண்டு அமர்வுகள் பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரிகள் முதலாவது தடவையில் ஒரே முறையில் 5 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு 1**.- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வகைப்படுத்தலின்படி பாடங்களின் எண்ணிக்கையை வகைப்படுத்தும்போது விஞ்ஞான பாட இலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும், இல. 42, 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும். க. பொ. த. (சா.தர) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களின் எண்ணிக்கை அதன் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு 2**.- க.பொ. த. (சா.தர) பரீட்சையில் தொழில்நுட்ப பாட எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயன்முறைப் பரீட்சையில் சித்தியடைந்திருந்த போதும் அப்பாடத்தில் சித்தியடையாதவராக கருதப்படும்.

**குறிப்பு 3**.- விருப்பத்துக்குரிய தமிழ், ஆங்கிலம் மற்றும் சிங்களம் ஆகிய பாடங்கள் க. பொ. த. (சா. தர) பாடத் திட்டத்துக்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்திபெறுதல் க. பொ. த. (சா. தர) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாக கருதப்பட மாட்டாது.

(இ) பௌதிக தகைமைகள் :

* உயரம் : 5 அடி 4 அங்குலம் (ஆகக் குறைந்தது)

* மார்பு : 30 அங்குலம் ஆகக் குறைந்தது (மூச்சு விட்ட நிலையில்)

**குறிப்பு 1**.- சிறந்த விளையாட்டுத் திறமையுடைய தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமை காட்டியுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் பௌதிக தகைமைகள் குறைவாக இருப்பினும் அவர் பிற தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் தற்றுணிபின்படி தகைமை பெறுவர்.

(ஈ) பார்வை தொடர்பான தேவை :

ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 க்கு குறைவாக இருத்த லாகாது. ஒரு கண்ணின் பார்வை 6/6 ஆகவும் மற்ற கண்ணின் பார்வை 6/18 ஆகவும் இருப்பின் ஏற்றுக்கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் ஒருவர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவராயின் தகைமை அற்றவராவார்.

(உ) பிற தகைமைகள்.- விண்ணப்பதாரர் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்துப் பெற்றவர்கள், விவாகமான வர்களாகக் கருதப்படுவர்.) ஏற்கனவே பொலிஸ் திணைக் களத்தில் பணிபுரியும் பாதுகாப்பு உதவி உத்தியோகத்தர் களுக்கும் இது ஏற்புடையதாகாது.

**5. ஆட்சேர்ப்பு முறை.-** தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் ஆரம்ப தகைமை பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். அதில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் பின்வரும் உடற்தகுதிப் பரீட்சையில் பங்கு பற்றலாம் அதாவது மனோ வலிமை பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.-

மீற்றர் 1000 - 03 நிமிடங்கள் 44 விநாடிகள்.

உடற்தகுதிப் பரீட்சையில் அதாவது மனோவலிமைப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகள் எடுப்பவர்கள் மாத்திரம் எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப் படுவர்.

**எழுத்து பரீட்சை :**

* எழுத்துப் பரீட்சை இரு வினாத்தாள்களை உள்ளடக்கி உள்ளது. அவை :-

    (அ) 45 நிமிடங்களில் 500 சொற்களுக்கு குறையாமல் ஒரு விடயம் தொடர்பாக எழுதுதல் ;

    (ஆ) பொது அறிவும் நுண்ணறிவும் (1 மணித்தியாலம்.)

**6. மருத்துவப் பரிசோதனை.-** விண்ணப்பதாரர் தனது நியமனத்தைப் பெற முன்னர் மருத்துவ பரிசோதனையில் சித்தியடைய வேண்டும். மருத்துவப் பரிசோதனையானது ஆட்சேர்ப்பு செயற்பாட்டில் ஒரு அங்கம் மட்டுமே ஆகும். மருத்துவ பரிசோதனையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் தற்போது உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை, ஆகக்கூடிய புள்ளிகள் மற்றும் அவர்களது திறமை அடிப்படையில் அமைந்த பட்டியலில் அவர்களின் நிலையின் அடிப்படையிலேயே தெரிவுசெய்யப்படுவர். மருத்துவ பரிசோதனையில் சித்திபெறாதோர் நிராகரிக்கப்படுவர்.

**7. பின்னணி விசாரணைகள்.-** (அ) விண்ணப்பதாரரின் நன்நடத்தையும் அவரின் கிட்டிய உறவினர்கள், நண்பர்களின் நன்நடத்தைகள் தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும். துர்நடத்தையுள்ள விண்ணப்பதாரிகள் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரி பொய்யான தகவல்கள் வழங்குவது அவரை ஆட்சேர்ப்பிற்கு தகைமை அற்றதாக்கும். ஆட்சேர்ப்பின் பின்னர் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானது என வெளிப்பட்டால் சேவையில் இருந்து நீக்கப்படுவர்.

**8. அரச மொழி தேர்ச்சிக் கொள்கையை அமுல்படுத்தல் :**

- பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட 2007.04.28 ஆந் திகதிய 07/2007 ஆம் இலக்க சுற்று நிருபத்தின் பிரகாரம் 2007.07.01 ஆந் திகதியிலிருந்து அரச சேவைக்கு, மாகாண அரச சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் தாம் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழிகளிலும் சேவையில் சேர்ந்த திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் தேர்ச்சி பெறல் வேண்டும்.

- 2007.07.01 ஆந் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவி நிலைக்கு கீழே சேர்க்கப்படும் அலுவலர்கள், அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் இரண்டாம் மட்ட மொழிப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

- நியமனத் திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் இரண்டாம் அரச கருமமொழியில் சித்தியடையாதவர்களாயின் குறித்த மொழியில் தேர்ச்சியடையும் வரை சம்பள ஏற்றம் நிறுத்தி வைக்கப்படும்.

**9. நியமனக் கொள்கைகள்.-** இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத் திற்கு உட்பட்டதுமாகும். விதவைகள்/தபுதாரர்/அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு அங்கத்துவப்பணம் செலுத்துதல் வேண்டும்.

**10. சேவை நிபந்தனைகள்.-** (அ) நியமனம் 3 ஆண்டு கால பயிலுநர் கால அடிப்படையில் இருக்கும்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் அரசாங்கத்தின் மொழிக் கொள்கைக்கு இணங்க ஏற்கனவே ஆக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் ஆக்கப்படக் கூடிய விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபனக் கோவையின் I ஆம், II ஆம் தொகுதிகளில் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகளுக்கும் நிதி ஒழுங்கு விதிகள், திணைக்களக் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்பட்டவராவார்.

(ஈ) பதவி உறுதிப்படுத்துவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோகத் தர்களும் விதிக்கப்பட்ட திணைக்களப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். விதிக்கப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்குத் தகுதியற்றவர் எனக் கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவார்.

(உ) நியமனம் பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் பொலிஸ்மா அதிபரின் அங்கீகாரம் இல்லாமல் தமது பதவியில் உறுதிப்படுத்தும் வரை திருமணம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள். எனினும் 1973.02.28 ஆந் திகதிய 41 ஆம் இலக்க பொலிஸ் வர்த்தமானியின் பகுதி II பிரகாரமும் 2006.10.19 ஆந் திகதிய மற்றும் 1952/2006 ஆம் இலக்க 2007.08.09 ஆந் திகதிய பொலிஸ்மா அதிபரின் சுற்று நிருபத்தின் (திருத்தப்பட்டது) பிரகாரம் திருமணம் செய்வதற்கான விசேட காரணங்களைத் தெரிவித்து பொலிஸ்மா அதிபரின் அனுமதியுடன் திருமணம் செய்ய முடியும்.

(ஊ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குப் பின் 3 வருட பயிலுநர் நிலையில் பொலிஸ் திணைக்களத்திலேயே பணியாற்ற வேண்டியதுடன் பயிலுநர் சேவைக்காலம் முடிவடை வதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே அவருடைய பயிற்சிக்காகவும், சீருடை மற்றும் ஏனையவைகளுக்கும் செய்த செலவினங்களைச் செலுத்துவதற்கு சம்மதம் தெரிவித்து ஒப்பந்த மொன்றில் கையொப்பமிட வேண்டும். அப்பெறுமதி இலங்கைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும். பதவி விலகல் அங்கீகரிப்பது 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக்கோவையின் I ஆம் தொகுதியின் V ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

(எ) ஆட்சேர்க்கப்படும் பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் பயிற்சியினை ஆரம்பித்தவுடன் உடனடியாக 1693/2003 ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்றுநிருபத்துக்கு இணங்க பொலிஸ் ஒழுக்காற்றுக் கோவையினை பின்பற்றுவதாக பிரமாணம் செய்தல் வேண்டும்.

(ஏ) ஆட்சேர்க்கப்படும் பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் உடனடியாக பொலிஸ் மா அதிபரின் 1804/2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அரச சேவைக்கு கட்டுப்பட்டு நடப்பதாக உறுதி/சத்தியம் செய்தல் வேண்டும்.

(ஐ) பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் பொலிஸ் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு உரித்துடையவராவர்.

11. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II (அ) வில் வெளியிடப்பட்டுள்ள அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைய பொது நிபந்தனைகளுக்கு கவனம் ஈர்க்கப்படுகின்றது.

(ஆ) 1990.03.10 ஆந் திகதிய 15/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் நியதிகளின்படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

12. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் கீழ்க்காணும் ஆவணங்களின் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும். (மூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் ஆகாது) :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) அண்மையில் பெறப்பட்ட குணச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது);

(இ) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ;

(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது பாடத்துக்கு புறம்பாக பெறப்பட்ட சான்றிதழ்கள் ;

(உ) தொழில் அனுபவம் சம்பந்தமான சான்றிதழ்கள் (இருப்பின்) ;

(ஊ) தேசிய அடையாள அட்டையின் நிழற்படப் பிரதி.

13. (அ) தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்புதல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற சான்றிதழ்களும் இணைக்கப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் 11" x 8" அளவில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை தமது சொந்த கையெழுத்தில் பூரணப்படுத்தி சான்றிதழ்களது பிரதிகளும் 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் திணைக்களத்தின் எந்த உத்தியோகத்தர்களிடமும் விண்ணப்பங்களை நேரடியாக கையளித்தலாகாது.

14. இவ்வறிவித்தலின் விதிமுறைகளுக்கு அமைவுறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பாக விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்பட மாட்டாது.

**குறிப்பு**.- பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளோ, பிற செலவுகளோ வழங்கப்படமாட்டாது.

என். கே. இலங்ககோன்,
பொலிஸ் மா அதிபர்.

பொலிஸ் தலைமையகம்,
கொழும்பு 01.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை பொலிஸ் திணைக்களம்**

பொலிஸ் கொஸ்தாபல் பதவி

1. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழ்களில் உள்ளபடியும் இருத்தல் வேண்டும்) :-----.

(ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.

(இ) விண்ணப்பிக்கும் பதவி :-----.

2. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :-----.

(தேசிய அடையாள அட்டையின் நிழற்படப் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)

3. தந்தையின் முழுப் பெயர் :-----.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.

பிறந்த இடத்துக்குரிய பிரதேச செயலகப் பிரிவு :----.

மாகாணம் :-----.

5. (அ) தற்போதைய முகவரி :-----.

(ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.

(இ) நிரந்தர முகவரி :-----.

(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.

(உ) நிரந்தர முகவரிக்குரிய கிராம அலுவலர் பிரிவு :----.

பிரதேச செயலகம் :----.

(ஊ) தொலைபேசி இலக்கம் (வதிவிடம்) :----- கையடக்க தொலைபேசி இல. :-----.

6. (அ) தேசிய இனம் :-----.

(ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரஜையா ? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரஜையா ? (பதிவு மூலம் எனின் பதிவுச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்) :-----

(இ) வம்சாவளி மூலம் இலங்கைப் பிரஜையானால் பின்வருபவர்களின் பிறந்த இடங்களைக் குறிப்பிடவும் :-

(1) விண்ணப்பதாரர் :-----.
(2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.
(3) விண்ணப்பதாரரின் தந்தை வழி பாட்டன் :-----.
(4) விண்ணப்பதாரரின் தந்தை வழி முப்பாட்டன் :-----.

7. விண்ணப்பதாரரின் பிறந்த திகதி :-----.

(பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)

வயது (வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளவாறு) :-

வருடங்கள் :----- மாதங்கள் :----- நாட்கள் :-----.

8. உயரம் : அடி :-----, அங்குலம் :-----;

மார்பு : அங்குலம் :-----.

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

10. மேலதிகத் தகைமைகள் உண்டா ? (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

11. திருமணம் ஆனவரா? திருமணம் ஆகாதவரா ? :-----.

12. (அ) தற்போது செய்யும் தொழில் :-----.

(ஆ) நீங்கள் இலங்கை ஆயுதப்படை அங்கத்தவரா ? :-----.

13. வேறு ஏதேனும் விசேட திறமைகள்/தகைமைகள் உண்டா ? :-----.

14. உங்களைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உறவினர்கள் அல்லாத இரு நபர்களின் பெயர் முகவரிகளைக் குறிப்பிடுக :-

(i) -----.

(ii) -----.

15. (அ) நீங்கள் இதற்கு முன்னர் றிசேவ் பொலிஸ் சேவையில் அல்லது நிரந்தர பொலிஸ் சேவையில் ஏதாவது பதவி ஒன்றுக்கு விண்ணப்பித்ததுண்டா? (ஆம் எனின் அது தொடர்பான விபரங்களைத் தருக) :-----.

(ஆ) நீங்கள் இதற்கு முன்னர் இலங்கை நிரந்தர பொலிஸ் அல்லது றிசேவ் பொலிஸ் சேவையில் கடமையாற்றியுள்ளீரா? (ஆம் எனின் அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைக் குறிப் பிடுக) ? :-----.

16. நீங்கள் தற்போது றிசேவ் பொலிஸ் சேவையில் சேவையாற்று கிறீரா ? அவ்வாறாயின் நியமனத் திகதி, பதவிநிலை மற்றும் இலக்கம் போன்ற விபரங்களினைக் குறிப்பிடுக. நியமனக் கடிதத்தின் பிரதியை இணைக்குக :-----.

17. (அ) நீங்கள் ஆயுதப் படைதாங்கு சேவையில் சேவையாற்றுகிறீரா ? அவ்வாறாயின் குறிப்பிட்ட அப்படைதாங்கு சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும்.

(ஆ) நீங்கள் ஆயுதப் படைதாங்கு சேவையில் சேவையாற்றியுள்ளீரா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதி இணைக்கப்படல் வேண்டும் :-----.

18. (அ) நீங்கள் படைதாங்கு சேவையில் தொண்டர் படையினராக சேவையாற்றுகிறீரா? அவ்வாறாயின் குறிப்பிட்ட அப்படை தாங்கு தொண்டர் சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும்.

(ஆ) நீங்கள் படைதாங்கு தொண்டர் அணிச் சேவையில் சேவையாற்றியுள்ளீரா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும் :-----.

19. நீங்கள் ஏதாவது குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளீரா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டுள்ளீரா ? (அவ்வாறாயின் விபரம் தருக.) :-----.

20. உங்கள் உறவினர்கள் எவரேனும் தவறு சம்பந்தமான சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனரா ? அல்லது அது தொடர்பான அழைப்பாணை கொடுக்கப்பட்டுள்ளனரா அல்லது குற்றம் சுமத்தப்பட் டுள்ளனரா அல்லது குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளனரா? (அவ்வாறாயின் விபரங்களைத் தருக) :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவை யென்றும் இத்தால் நான் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ, பொய்யானவையென்றோ தெரியவரின் நான் பொலிஸ் திணைக்கள சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பினும் எந்த சந்தர்ப்பத்திலும் உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

.................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

8-644

---

## நீதிச்சேவை ஆணைக்குழு

பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசங்களில் நிலவும் “காதி” பதவிக்கு ஆட்களைச் சேர்த்துக்கொள்வதற்காக முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (அத்தியாயம் 115) இன்கீழ் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழே குறிப்பிடப்படும் தகைமைகளைக் கொண்டவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம் :

விண்ணப்பதாரர் முஸ்லிம் சமயத்தைச் சார்ந்த ஆணாக இருத்தல் வேண்டும் என்பதுடன், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றுள்ள பட்டதாரி ஒருவராக அல்லது முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவன மொன்றினால் வழங்கப்படும் சான்றிதழ் பெற்றுள்ள மௌலவி ஒருவராக அல்லது கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்படும் அல்-ஆலிம் சான்றிதழ் பெற்றுள்ள ஒருவராக அல்லது சட்டத்தரணி ஒருவராக அல்லது அதற்குச் சமனான தொழில்சார் தகைமையுடைய ஒருவராக அல்லது ஓய்வுபெற்ற பதவிநிலை தரத்திலான உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல் வேண்டும்.

தற்போது அரச சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் இதற்கு விண்ணப் பிக்கத் தகைமையற்றவர்களாவர்.

விண்ணப்பதாரர் இஸ்லாம் மார்க்கத்தைப் பற்றி ஒழுகுபவராகவும், 40 வயதிற்கு மேற்பட்டவராகவும், நல்ல தேகாரோக்கியம் உள்ளவ

ராகவும், நல்லொழுக்கமுள்ளவராகவும் இருக்கவேண்டியதோடு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் மற்றும் விசேடமாக முஸ்லிம் சட்டம் பற்றிய நல்ல அறிவுடையவராகவும் சமூகத்தில் நல்ல வரவேற்பும் மதிப்பும் உள்ளவராகவும் விவாகமானவராகவும் இருத்தல் வேண்டும்.

தெரிவுசெய்யப்படும் அபேட்கசர் நியமனக் கடிதத்தில் குறிப்பிடப் படுகின்ற கால எல்லைக்கு நியமனம் செய்யப்படுவர்.

காதியாக நியமிக்கப்படுபவர் அப்பிரதேசத்திற்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருப்பது சட்ட ரீதியான அவசியமாகும்.

காதி ஒருவருக்கு 6,000 ரூபா மாதாந்தக் கொடுப்பனவுக்கு மேலதிகமாக உதவியாளர் சேவை, எழுதுகருவிகள் மற்றும் அஞ்சல் செலவுக்காக மாதாந்தம் 5,000 ரூபா கொடுப்பனவொன்றும் வழங்கப்படும்.

கீழே காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய, விண்ணப்பப்படிவங்கள் 2014 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 14 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் என்னை வந்தடையுமாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''காதி'' எனக் குறிப்பிடல் வேண்டும். ஆவணங்களின் மூலப்பிரதிகள் விண்ணப்பத்துடன் அனுப்பப்படலாகாது.

டபிள்யூ. கே. டீ. விஜேரத்ன,
சிரேஷ்ட உதவிச் செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழுவின்
செயலாளருக்காக.

நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,
த. பெ. இல. 573,
கொழும்பு 12,
2014, யூலை 22.

**அட்டவணை**

1. அம்பாந்தோட்டை.- அம்பாந்தோட்டை மாவட்டத்தின் அம்பாந்தோட்டை நீதிப்பிரிவுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (அத்தியாயம் 115) இன்படி நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது.

2. கொழும்பு மேற்கு.- கொழும்பு நீதிப் பிரிவுக்குட்பட்ட தெகிவளை, கல்கிஸ்ஸை, இரத்மலானை, நுகேகொடை, பெபிலியான, மஹரகமை, பன்னிபிட்டிய, ஹோமாகம, பொல்கஸ்ஓவிட்ட, இங்கிரிய, ராஜகிரிய, பத்தரமுல்லை, அத்துருகிரிய பிரதேசங்களுக்கான காதிப் பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (அத்தியாயம் 115) இன்படி நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது.

3. அக்குறணை.- கண்டி மாவட்டத்தின் அக்குறணை பிரதேச செயலாளர் பிரிவுக்கான காதிப் பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (அத்தியாயம் 115) இன்படி நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது.

மாதிரி விண்ணப்பப்படிவம்

1965 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கம் மற்றும் 1969 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான முஸ்லிம் விவாக, விவாகநீக்கச் சட்டத்தின் (அத்தியாயம் 115) கீழ் ........................................ பிரதேசத்துக்கான காதிப் பதவி

1. முழுப்பெயர் :
2. முதலெழுத்துக் களுடன் பெயர் :
3. நிரந்தர முகவரி :
4. அஞ்சல் முகவரி :
5. பிறந்த திகதி :
6. வயது :
7. தேசிய இனம் :
8. சமயம் :
9. தே. அ. அ. இல. :
10. தொலைபேசி இலக்கம் :
11. கல்வித் தகைமைகள் :
12. தொழில் தகைமைகள் :

13. விண்ணப்பதாரி எழுத, வாசிக்கத் தெரிந்த மொழிகள் :

| | |
|---|---|
| | |
| | |

14. விண்ணப்பதாரிக்கு முஸ்லிம் சட்டம் பற்றிய அறிவுண்டா ? :

15. விவாகமானவரா ? :

16. நீர் ஒரு சட்டத்தரணியா ? அவ்வாறாயின் இணைத்துக்கொள்ளப் பட்ட திகதி :

17. முன்னைய, தற்போதைய தொழில்கள் (திகதி விபரங்களுடன்) ? :

| முதல் | வரை | தொழில் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

18. விண்ணப்பதாரிக்குரிய சொத்துக்களின் பெறுமதி : ரூ.

19. மாதாந்த வருமானம் : ரூ.

20. கடன்கள் இருப்பின் தொகை விபரம் : ரூ.

21. சென்ற பத்து வருட காலப்பகுதியினுள் நீங்கள் முனைப்பாக அரசியலில் ஈடுபட்டிருந்தீர்களா ? :

22. நீர் வருமான வரி செலுத்துமொருவரா ? :

23. உங்களுக்கெதிராக நீதிமன்றமொன்றில் குற்றவியல் வழக்கேதே னும் உண்டா ? இருந்ததா ? :

24. நீதிமன்றத்தில் தண்டனை பெற்றிருப்பின் அதுபற்றிய விபரங்கள் ? :

உங்களைப் பற்றி நன்கறிந்துள்ள உங்களது தனிப்பட்ட விபரங்கள் பெறக்கூடியவர்கள் :

| | |
|---|---|
| (1) பெயர் : | (2) பெயர் : |
| முகவரி : | முகவரி : |
| தொழில் : | தொழில் : |
| உங்களையறிந்துள்ள காலப் பகுதி : | உங்களையறிந்துள்ள காலப் பகுதி : |

இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் உறுதிப் படுத்துகின்றேன்.

........................................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி ..............................,

**குறிப்பு**.- அனைத்து சான்றிதழ்களினதும் பிரதிகளை இத்தோடு இணைக்கவும்.

*8-476*

---

## தாவரவியல் பூங்காக்கள் மற்றும் பொழுதுபோக்கு அலுவல்கள் அமைச்சு

### தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்

*தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் பூங்காக்களில் வெற்றிடமாக உள்ள ஆரம்ப நிலை பகுதியளவில் தேர்ச்சிபெற்ற (PL-2) சேவை வகையைச் சார்ந்த பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்*

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் கீழ் இயங்கும் பூங்காக்களுக்கு ஆரம்ப நிலை பகுதியளவில் தேர்ச்சிபெற்ற சேவை வகையைச் சார்ந்த பின்வரும் பதவிகளுக்காக தகுதிவாய்ந்த இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி மற்றும் தொழிலின் தன்மை**

| தொடர் இலக்கம் | பதவி | பிரதான கடமைகள் |
|---|---|---|
| 1 | சுற்றுலா விடுதிப் பொறுப்பாளர் | தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்திற்குச் சொந்தமான சுற்றுலா விடுதிகளை கவர்ச்சிகரமாகப் பேணி வரல், அதிதிகளுக்கான உணவுகளையும் பானங்களையும் தயார்செய்தல், வரவுசெலவுகளைக் கணக்கு அறிக்கையிடல். |

| தொடர் இலக்கம் | பதவி | பிரதான கடமைகள் |
|---|---|---|
| 2 | மேசன் | அனுமதிக்கப்பட்ட திட்டங்கள் மற்றும் மதிப்பீடுகளின் பிரகாரம் மேசன் தொழில் விடயம் சம்பந்தப்பட்ட நிர்மாணப் பணிகள், திருத்தங்கள் மற்றும் பேணுகை நடவடிக்கைகள். |
| 3 | தச்சன் | தச்சன் தொழில் விடயம் சம்பந்தப் பட்ட நிர்மாணப் பணிகள், திருத்தங் கள் மற்றும் பேணுகை நடவடிக்கை களை உரிய அமைப்பில் மேற்கொள் ளல். |
| 4 | மோட்டார் வாகன தொழில்நுட்ப வியலாளர் | திணைக்களத்துக்குச் சொந்தமான அனைத்து வாகனங்கள் மற்றும் எரிபொருள் பாவனையின் மூலம் இயங்கும் இயந்திரங்களது திருத்தப் பணிகள் தொடர்பில் பரிசோதனை களைச் செய்து அறிக்கை சமர்ப்பித் தல், அதற்கு உதவுதல் மற்றும் தேவையான திருத்தங்களைச் செய்தல் |
| 5 | மின்சாரத் தொழில்நுட்ப வியலாளர் | திணைக்களத்துக்குச் சொந்தமான அலுவலகக் கட்டிடங்கள், உத்தியோக பூர்வ வாசஸ்தலங்கள் ஆகியவற்றின் ஒரு வழி/மூவழி மின்சாரத் தொகுதி கள் தொடர்பான அனைத்து நட வடிக்கைகளும் |
| 6 | ஓட்டுநர் | தாவர நாற்று மேடைகளிலுள்ள விசேடமான அலங்காரத் தாவரங் கள், பூக்கன்றுகள் மற்றும் வேறு தாவரக் கன்றுகளை ஒட்டல் செய்யும் அனைத்து நடவடிக்கை களும் மற்றும் புதிய உத்திகள் தொடர்பிலான பரிசோதனை முயற்சிகளும் |
| 7 | லேபல் இடுபவர் | பூங்காவினுள் தாவரங்கள் மற்றும் இடங்கள் ஆகியவற்றை அறிந்து கொள்வதற்கான பெயர்ப்பலகை களை மும்மொழிகளிலும் தயாரித் தல், அது தொடர்பான ஏனைய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல் மற்றும் பெயர் மற்றும் விபரப் பலகைகளை இற்றைப் படுத்துதல் |

*வெற்றிடம் நிலவும் மாவட்டங்கள்*.- அம்பாந்தோட்டை, கொழும்பு, கம்பஹா, கண்டி, நுவரெலியா

**2. சேவை நிபந்தனைகள்**.- தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் கள் கீழ்வரும் நிபந்தனைகளுக்கிணங்க சேவைப் பிரிவின் III ஆம் வகுப்புக்கு இணைத்துக்கொள்ளப்படுவர் :-

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உடையதுமாகும்.

(ii) நியமனம் பெற்ற திகதியிலிருந்து 3 வருட தகுதிகாண் காலத்துக்குட்பட்டது.

(iii) தெரிவுசெய்யப்படும் அலுவலர்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பு, அரச கரும மொழிக் கொள்கை, தாபனக்கோவை, நிதிச் சட்டங்கள், திணைக்களக் கட்டளைகள், ஏனைய அரசாங்க சுற்றுநிருபங்கள் மற்றும் அரச சேவை ஆணைக்குழுவின் நடைமுறைச் சட்ட ஒழுங்குவிதிகளின்கீழ் தற்போது நடைமுறையிலுள்ள மற்றும் எதிர்காலத்தில் ஏற்படுத்தப்பட முடியுமான திருத்தங்கள் உள்ளிட்ட சட்டதிட்டங்களுக்கும் யாப்புக்களுக்கும் மற்றும் விதிமுறைகளுக்கும் கட்டுப்பட்டு காரியமாற்ற வேண்டும்.

(iv) III ஆம் வகுப்புக்கு நியமிக்கப்பட்ட திகதி முதல் 3 வருடங் களுக்குள் 1 ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(v) அவ்வாறே 2007.05.28 ஆந் திகதிய 07/2007 ஆம் இலக்கம் கொண்ட பொது நிர்வாகச் சுற்றுநிருபத்தின்படி இரண்டாவது அரச கரும மொழியிலான தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளவும் வேண்டும்.

(vi) சேவைக்கான தேவையின் அடிப்படையில் திணைக்களத்தின் எந்தவொரு சேவை நிலையத்திலும் சேவையாற்ற இணங்குதல் வேண்டும்.

**3. சம்பளப் பிரிவும் அளவும்**.- (i) சம்பளப் பிரிவு-PL-2-2006A.

(ii) சம்பள அளவு.- 12,210-10X130-10X145-10X160-12X170- ரூபா 18,600.
(06/ 2006 (iv) ஆம் இலக்கம் கொண்ட பொது நிர்வாகச் சுற்றுநிருபத்தின்படி)

**4. தகைமைகள்**.- 4.1 (i) கல்வித் தகைமைகள்.- க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில் குறைந்தது இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(ii) தொழில் தகைமைகள்.- இப்பதவிக்கு உரிய முறையில் மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப் பட்டுள்ளபடி உரிய துறையில் அல்லது அதற்கு நெருக்கமான துறையொன்றில் ஆகக்குறைந்தது தேசிய தொழில் தகைமை மட்டம் (NVQ) இரண்டில் அல்லது அதற்குச் சமமான தகைமையைப் பெற்றிருத்தல் (எழுத்து மூலமான சான்றிதழ்களால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.)

(iii) அனுபவம்.- விண்ணப்பிக்கும் பதவிக்கு உரிய பணிகள் தொடர்பில் குறைந்தது 3 வருட சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல் (இத்துறையில் பெற்றுள்ள அனுபவம் பற்றிய விபரங்கள் எழுத்து மூலமான சான்றிதழ்களால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.)

4.2 வேறு தகைமைகள்.- (i) விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரிகள் நன்னடத்தை உடையவர்களாயிருத்தல் வேண்டும்.

(iii) பதவியில் இணைத்துக்கொள்ளப்படுவதற்கு அவசியமான மேலே இலக்கங்கள் 4.1 (i), 4.1 (ii) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டிருக்கும் தகைமைகளை இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருக்கும் விண்ணப்பம் கோரல் முடிவுத் திகதிக்கு சகல வகைகளிலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

(iv) சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எந்தவொரு பகுதியிலும் பணியாற்றவும் பதவியின் பொறுப்புக்களையும் கடமைகளையும் நிறைவேற்றவும் போதுமான உடல் மற்றும் உள ஆரோக்கியத்துடன் இருக்கவேண்டியதுடன் அரசாங்க வைத்தியப் பரிசோதனையொன்றில் சித்தியடையவும் வேண்டும்.

(v) விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (தற்போது நிரந்தர அரச சேவையில் இருக்கும் அலுவலர்களைப் பொறுத்தவரையில் இவ்வய தெல்லை ஏற்டையதன்று.)

5. **விண்ணப்பிக்கும் ஒழுங்கு**.- இவ்விளம்பரத்தில் காட்டப்பட்டுள்ள மாதிரிக்கேற்ப ஏ4 (8 1/2" x 12") அளவு கடதாசியில் இரு பக்கங் களையும் உபயோகித்து விண்ணப்பப்படிவங்களைத் தயாரித்துக் கொள்ளல் வேண்டும். பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை "பணிப்பாளர் நாயகம், தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம், த. பெ. இல. 14, பேராதனை" என்ற முகவரிக்கு 2014, செத்தெம்பர் மாதம் 5 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிப்பதாயின் வெவ்வேறான விண்ணப்பப்பத்திரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

6. **தெரிவுசெய்யும் ஒழுங்கு முறை**.- கட்டமைக்கப்பட்ட (முறையான) நேர்முகப் பரீட்சையொன்றின் மூலமும் தொழில் பரீட்சை ஒன்றின் மூலமும்.

7. கட்டமைக்கப்பட்ட (முறையான) நேர்முகப் பரீட்சையில் மேலதிக கல்வித் தகைமைகள், மேலதிக அனுபவம், மேலதிக தொழில் தகைமைகள், மொழித் தேர்ச்சி மற்றும் நேர்முகப் பரீட்சையின்போது காட்டும் தகைமைகள் ஆகிய துறைகளுக்காக புள்ளிகள் வழங்கப்படுவ தோடு அவ்வப் பதவிக்குரிய பணிகள் குறித்து விண்ணப்பதாரிக்கு இருக்கும் பிரயோக இயலுமைகள் தொழில் பரீட்சையின்போது பரிசோதிக்கப்படும். பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் மற்றும் உரிய தகைமைகளைப் பூர்த்திசெய்யாத விண்ணப்பங்கள் ஆகியவற்றை நிராகரிக்கும் உரிமையும் மற்றும் சேவையில் இணைத்துக்கொள்வது பற்றிய இறுதித் தீர்மானமெடுக்கும் உரிமையும் மற்றும் சேவையில் இணைத்துக்கொள்வது பற்றிய இறுதித் தீர்மானமெடுக்கும் உரிமையும் தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அவர்களுக்குரிய தாகும்.

கலாநிதி டீ. எஸ். ஏ. விஜேசுந்தர,
பணிப்பாளர் நாயகம்.

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்,

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தாவரவியல் பூங்காக்கள் மற்றும் பொதுப் பொழுதுபோக்கு அலுவல்கள் அமைச்சு**

***தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்***

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் ஆரம்ப நிலை (PL-2) சேவை வகையைச் சார்ந்த பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்

(அலுவலகப் பாவனைக்கு)

1. நீங்கள் விண்ணப்பிக்கும் பதவிக்கு முன்னால் ( ✓ ) அடையாளமிடவும்.
(ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பதாயின் வெவ் வேறான விண்ணப்பப்பத்திரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.)

| | |
|---|---|
| 1. சுற்றுலா விடுதிப் பொறுப்பாளர் | |
| 2. மேசன் | |
| 3. தச்சன் | |
| 4. மோட்டார் வாகன தொழில்நுட்பவியலாளர் | |
| 5. மின்சாரத் தொழில்நுட்பவியலாளர் | |
| 6. ஒட்டுநர் | |
| 7. லேபல் இடுபவர் | |

2. முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) (திரு./திருமதி/செல்வி) :----.

3. முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

5. நிரந்தர முகவரி :----.

6. தபால் முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

7. 7.1 பிறந்த திகதி :

ஆண்டு :---- மாதம் :---- திகதி :----.

7.2 விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதிக்கு வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

8. ஆண்/பெண் : ☐
பெண்-1, ஆண்-2

9. திருமணமானவர்/திருமணமாகாதவர் ☐

10. நேர்முக/தொழில் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்- (சிங்களம்-1, தமிழ்-2, ஆங்கிலம்-3) : ☐

11. தொலைபேசி இலக்கம் :----.

12. தகைமைகள் :

12.1 கல்வித் தகைமைகள் :
முதலாவது அமர்வு
க. பொ. த. (சா. த.) பரீட்சை விபரம் :
* பரீட்சைக்குத் தோற்றிய வருடம் மற்றும் மொழி மூலம் :----.
* பரீட்சை சுட்டெண் :----.
* பரீட்சைப் பெறுபேறு :

| பாடம் | சித்தி |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |

(இரண்டாவது அமர்வில் சித்திபெற்ற விண்ணப்பதாரிகள் மாத்திரம் இம்மாதிரிக்கு ஏற்ப அப்பெறுபேற்றையும் குறிப்பிடவும்.)

12.2 தொழில் தகைமைகள் :
- * பெற்றுக்கொண்டுள்ள தொழில் தகைமை :----.
- * கால அளவு :----.
- * அதனை நிறைவுசெய்த திகதி :----.
- * உரிய நிறுவனம் :----.

12.3 அனுபவம் :----.
(தொழிலின் தன்மை, கால அளவு, நிறுவனம் பற்றிய தகவல்களைக் குறிப்பிடவும்)

13. தற்போது அரச நிரந்தர சேவையிலுள்ள அலுவலர்களுக்காக-

13.1 தற்போது வகிக்கும் பதவி மற்றும் தரம் :----.
13.2 சேவை நிலையம் :----.
13.3 ஆரம்ப நியமனத் திகதி :----.
13.4 அண்மைய 5 வருடங்களில்-

(i) ஒழுக்காற்றுக் குற்றச்சாட்டொன்றுக்கு உட்பட்டுள்ளார்/ உட்படவில்லை.
(ii) சம்பளமற்ற விடுமுறை பெற்றுக்கொண்டுள்ளார்/ பெற்றுக்கொள்ளவில்லை.

**விண்ணப்பதாரியின் பிரகடனம்**.- இவ்விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கு எட்டிய வகையில் உண்மையானதும் சரியானதும் என தெரிவிக்கின்றேன். மேலும், நான் அரச சேவையின் பதவியொன்றிலிருந்து சேவை நீக்கம் செய்யப்பட்ட அல்லது சேவையை விட்டுச் சென்ற ஒருவரல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அவர்களால் விதிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு இணங்கி நடப்பதோடு, இப்பதவியின் நியமனம் மற்றும் சேவை நிலையம் ஆகியன பற்றிய அனைத்துத் தீர்மானங்களையும் எடுக்கும் உரிமை அப்பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கே உண்டு என்பதனையும் ஏற்றுக்கொள்கின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**தற்போது அரச சேவையிலுள்ள அலுவலர்களுக்காக :**

14. **திணைக்களத் தலைவரின் உறுதிமொழி** :
இவ்விண்ணப்பதாரியான (திரு./திருமதி/செல்வி) .................... ........................... தற்போது இவ் அமைச்சில்/திணைக்களத்தில் ............................................. (நிரந்தர/தற்காலிக) அலுவலர் என்றும், அவருக்கு மேற்படி பதவியின் பணிகளை ஆற்றுவதற்குத் தகைமை இருக்கிறது/இல்லை என்றும் தெரிவிக்கின்றேன். அவர் இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால், இவ் அமைச்சில்/திணைக்களத்தின் அவர் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும் எனவும் தெரிவிக்கின்றேன்.

----,
நிறுவனத் தலைவரின் கையொப்பமும் பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவி :----.
அமைச்சு/திணைக்களம் :----.
திகதி :----.

8-559

---

## கல்வி அமைச்சு

### க. பொ. த. (உ. த.) புதிய தொழில்நுட்பவியல் பாடத்திட்டத்தின் உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் மற்றும் தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் எனும் பாடங்களுக்காகக் காணப்படும் சிங்கள மற்றும் தமிழ் மொழி மூல ஆசிரிய வெற்றிடங்களுக்காகப் பட்டதாரிகளை இலங்கை ஆசிரிய சேவையின் தரம் 3-I இற்கு ஆட்சேர்த்தல்

க. பொ. த. (உ. த.) புதிய தொழில்நுட்பவியல் பாடத்திட்டத்தின்கீழ் நாட்டின் பிள்ளைகளது அறிவினை மேலோங்கச் செய்யும் பொருட்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள மஹிந்தோதய விஞ்ஞான கூடங்களைக் கொண்ட இரண்டாம் நிலைப் பாடசாலைகளில் உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் மற்றும் தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் எனும் பாடங்களுக்காகக் காணப்படும் சிங்கள மற்றும் தமிழ் மொழிமூல ஆசிரிய வெற்றிடங்களுக்காக ஆசிரிய சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் இலங்கை ஆசிரிய சேவையின் தரம் 3-I இற்கு ஆசிரியர்களை ஆட்சேர்க்கும் பொருட்டுத் தகைமையுள்ள பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **தகைமைகள் :**

1.1 பொதுவான தகைமைகள் :

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல்.
(ii) நல்லொழுக்கம் மற்றும் சிறந்த உளவியல் மற்றும் உடலியல் ஆரோக்கியம் கொண்டவராயிருத்தல்.
(iii) 2014.09.15 ஆந் திகதிக்கு வயது 18 வருடங்களுக்குக் குறையாத மற்றும் 35 வருடங்களுக்கு மேற்படாதவராய் இருத்தல்.

1.2 கல்வித் தகைமைகள் :

(i) இலங்கை ஆசிரிய சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் 2014.09.15 ஆந் திகதியில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் விண்ணப்பிக்கும் பாடத்துடன் தொடர்புறும் பட்டமொன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும். அதன்படி உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் பாடத்திற்காக விண்ணப்பிக்கும் பட்டதாரிகள் விவசாய விஞ்ஞானப் பட்டமொன்றினைப் பெற்றிருக்க வேண்டியதுடன், தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் பாடத்திற்காக விண்ணப்பிக்கும் பட்டதாரிகள் அப்பட்டத்திற்குப் பௌதிகவியல் பாடத்தினைப் பிரதான பாடமாகக் கற்றிருத்தல் வேண்டும்.

(ii) கல்வி அமைச்சினால் ஏற்றுக்கொள்ளப்படும் கொள்கைகளின்கீழ் க. பொ. த. (சா. த.) மற்றும் க. பொ. த. (உ. த.) பரீட்சைகளில் கீழ்க்குறிப்பிடப்படும் வண்ணம் சித்தியெய்தியிருத்தல் வேண்டும் :

* க. பொ. த. (சாதாரண தர) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் 3 திறமைச் சித்திகள் சகிதம் தாய்மொழி மற்றும் கணிதம் உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தியெய்தியிருத்தல்.

* க. பொ. த. (உயர் தர) பரீட்சையில் ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தியெய்தியிருத்தல்.

**குறிப்பு**.- பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் உள்நாட்டு க. பொ. த. (சா. த.) மற்றும் க. பொ. த. (உயர் தர) பரீட்சைகளுக்குச் சமமாக ஏற்றுக்கொள்ளப்படும் பரீட்சைகளில் சித்தியெய்தியுள்ளவர்களுக்கும் விண்ணப்பிக்க முடியும்.

**2. ஆட்சேர்ப்பு முறை மற்றும் சேவை நிபந்தனைகள் :**

2.1 இவ்வறிவித்தலுடன் தொடர்புறும் வண்ணம் காணப்படும் ஆசிரிய வெற்றிடங்களிலும் அதிகமான விண்ணப்பதாரர்கள் விண்ணப்பித்திருப்பின் அவர்களை சேவையில் ஆட்சேர்க்கும் நியமன அதிகாரியினால் பணிக்கப்படுகின்ற வண்ணம் போட்டிப் பரீட்சையொன்று நடாத்தப்படுவதுடன் அதில் பெற்றுக்கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் கூட்டுத்தொகையினது முன்னுரிமை மற்றும் பாடசாலைகள் அடிப்படையிலான முறையினை எடுகோளாகக் கொண்டு, காணப்படும் ஆசிரிய வெற்றிடங்களுக்கான நியமனங்களைப் பெற்றுக்கொடுக்கத் தகுதியானவர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள். இவ்வறிவித்தலில் காணப்படும் தகைமைகளைக் கொண்டிராத விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்பட மாட்டார்கள்.

2.2 அவ்வாறே காணப்படும் ஆசிரிய வெற்றிடங்களிலும் குறைவான விண்ணப்பங்கள் கிடைத்திருப்பின் ஆட்சேர்ப்பிற்கான போட்டிப் பரீட்சையொன்று நடாத்தப்பட மாட்டாது. இங்கு விண்ணப்பதாரர்கள் ஆசிரிய சேவையில் ஆட்சேர்ப்பதற்கான தகைமைகளைப் பரீட்சிக்கும் தேர்வொன்றினை மட்டுமே எதிர்கொள்ளுதல் வேண்டும்.

2.3 விண்ணப்பதாரர்கள் இணைப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆசிரிய வெற்றிடங்கள் காணப்படும் பாடசாலைகளுக்கு மட்டும் ஆட்சேர்க்கப்படுவதுடன், அப்பாடசாலைகளில் சேவை புரிய விரும்புபவர்கள் மட்டுமே இதற்காக விண்ணப்பித்தல் வேண்டும்.

**குறிப்பு**.- விண்ணப்பிக்கும் பாடசாலையில் காணப்படும் குறித்த பாடத்துடன் தொடர்புறும் வெற்றிடங்களின் எண்ணிக்கையிலும் அதிகமான விண்ணப்பதாரர்கள் விண்ணப்பித்துள்ள சந்தர்ப்பங்களில் போட்டிப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் ஒழுங்கு வரிசைப்படி முன்னுரிமை வழங்கப்படும். ஒரே பாடசாலையினை விண்ணப்பித்துள்ள பல விண்ணப்பதாரர்கள் சமமான புள்ளிகளைப் பெற்றுள்ள சந்தர்ப்பங்களின்போது பாடசாலைக்குள்ள தூரத்தின் அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்படும். அக்கோட்பாடுகளின் அடிப்படையில் தகுதிபெறும் விண்ணப்பதாரிகள் ஆட்சேர்க்கப்படுவார்கள்.

இணைப்பு 1

**சிங்கள மொழிமூல ஆசிரிய வெற்றிடங்களது அட்டவணை**

**உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல்**

| மாகாணம் | தொடர் இலக்கம் | பாடசாலையின் பெயர் | முகவரி | ஆசிரிய வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|
| கிழக்கு | 1 | பொல்வத்தை மகா வித்தியாலயம் | பொல்வத்தைக் குடியிருப்பு அம்பாறை | 1 |
| வடமத்திய | 2 | கெபிற்றிகொள்ளேவ மகா வித்தியாலயம் | கெபிற்றிகொள்ளேவ | 1 |
| | 3 | வித்தியாதர் மகா வித்தியாலயம் | நொச்சியாகமை | 1 |
| | 4 | மெதிரிகியா தேசிய பாடசாலை | மெதிரிகியா | 1 |
| | 5 | லீலாரத்ன விஜேசிங்க மகா வித்தியாலயம் | ஹன்சயாபாலம | 1 |
| | 6 | வெலிக்கந்தை மகா வித்தியாலயம் | வெலிக்கந்தை | 1 |
| | 7 | ஸ்ரீ சித்தார்த்த வித்தியாலயம் | எப்பாவளை | 1 |
| சப்பிரகமுவ | 8 | விஜேரிய சுமன மகா வித்தியாலயம் | விஜேரிய (இறக்வானை ஊடாக) | 1 |
| | 9 | பின்னவலை மத்திய மகா வித்தியாலயம் | இறம்புக்கனை | 1 |
| வட | 10 | மடுக்கந்தை தேசிய பாடசாலை | மடுக்கந்தை | 1 |
| மேல் | 11 | மஹிந்த இராஜபக்ஷ வித்தியாலயம் | பிட்டிப்பன, ஹோமாகமை | 1 |
| தென் | 12 | பட்டப்பொல ம. ம. வி. | பட்டப்பொல | 1 |
| | 13 | கரந்தெனியா ம. ம. வி. | கரந்தெனியா, அம்பகஸ்தோவை | 1 |
| ஊவா | 14 | சனாதிபதி வித்தியாலயம் | வெலிமடை | 1 |

| மாகாணம் | தொடர் இலக்கம் | பாடசாலையின் பெயர் | முகவரி | ஆசிரிய வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|
| | 15 | மீகஹகிவுல மத்திய மகா வித்தியாலயம் | மீகஹகிவுல | 1 |
| வடமேல் | 16 | ஸ்ரீ பராக்கிரம தேசிய பாடசாலை | கொபேகனை | 1 |
| மத்திய | 17 | நாமினிஓயா ம. ம. வி. | வில்கமுவ, மாத்தளை | 1 |
| | 18 | இரங்கிரி தம்புள்ளை தேசிய பாடசாலை | தம்புள்ளை | 1 |
| | 19 | நுகவெலை ம. ம. வி. | நுகவெலை | 1 |

**தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்**

| மாகாணம் | தொடர் இலக்கம் | பாடசாலையின் பெயர் மற்றும் முகவரி | ஆசிரிய வெற்றிடங்கள் |
|---|---|---|---|
| வடமத்திய | 1 | மைத்திரிபால சேனாநாயக்க வித்தியாலயம், மதவாச்சி | 1 |
| | 2 | மெதிரிகியா தேசிய பாடசாலை, மெதிரிகியா | 1 |
| | 3 | தம்புத்தேகமை மத்திய மகா வித்தியாலயம், தம்புத்தேகமை | 1 |
| | 4 | பளுகஸ்தமனை மகா வித்தியாலயம், பளுகஸ்தமனை, பொலன்னறுவை | 1 |
| | 5 | விலயாய மத்திய மகா வித்தியாலயம், அரலகன்விலை | 1 |
| | 6 | மஹாசென் மகா வித்தியாலயம், பக்கமுனை | 1 |
| | 7 | வெலிக்கந்தை மகா வித்தியாலயம், வெலிக்கந்தை | 1 |
| | 8 | லீலாரத்ன விஜேசிங்க மகா வித்தியாலயம், ஹன்சயாபாலம | 1 |
| வடமேல் | 9 | மஹாசென் தேசிய பாடசாலை, நிக்கவரட்டியா | 1 |
| வடக்கு | 10 | மடுக்கந்தை தேசிய பாடசாலை, மடுக்கந்தை, வவுனியா | 1 |
| கிழக்கு | 11 | பொல்வத்தை மகா வித்தியாலயம், பொல்வத்தைக் குடியிருப்பு, அம்பாறை | 1 |
| | 12 | அபயபுர மகா வித்தியாலயம், அபயபுர, திருகோணமலை | 1 |

**தமிழ் மொழி மூல ஆசிரிய வெற்றிடங்களது அட்டவணை**

**உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல்**

| மாகாணம் | தொடர் இலக்கம் | பாடசாலையின் பெயர் | முகவரி | ஆசிரிய வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|
| வடக்கு | 1 | கிளி/கிளிநொச்சி ம. ம. வி. | ஏ9 வீதி, ஆனந்தபுரம் கிழக்கு, கிளிநொச்சி | 1 |
| | 2 | கிளிநொச்சி இந்து வித்தியாலயம் | ஜயந்திநகர், கிளிநொச்சி | 1 |
| | 3 | தாம்புரம் ம. வி. | தாம்புரம், பரந்தன் | 1 |
| | 4 | எருக்கலம்பிட்டி முஸ்லிம் ம. ம. வி. | எருக்கலம்பிட்டி, மன்னார் | 1 |
| | 5 | மன்/முருங்கன் ம. வி. | முருங்கன், மன்னார் | 1 |
| | 6 | மு/வித்தியானந்த வித்தியாலயம் | முள்ளியவளை | 1 |
| | 7 | ஒட்டுசுட்டான் ம. வி. | வித்தியாபுரம், ஒட்டுசுட்டான் | 1 |
| | 8 | வ/செட்டிக்குளம் ம. வி. | செட்டிக்குளம் | 1 |
| | 9 | வவுனியா தமிழ் ம. ம. வி. | வவுனியா | 1 |
| | 10 | மானிப்பாய் இந்து வித்தியாலயம் | மானிப்பாய் | 1 |
| | 11 | வயவிலான் ம. ம. வி. | வயவிலான் | 1 |
| | 12 | நெல்லியடி ம. ம. வி. | கரவெட்டி | 1 |
| | 13 | யாழ். இந்து வித்தியாலயம் | யாழ்ப்பாணம் | 1 |
| கிழக்கு | 14 | மட்/ஓட்டமாவடி ம. ம. வி. (தே. பா.) | ஓட்டமாவடி | 1 |
| | 15 | மட்/வாழைச்சேனை அந்நூர் ம. வி. | வாழைச்சேனை | 1 |
| | 16 | மட்/கிரான் ம. வி. | கிரான் | 1 |
| | 17 | மட்/வந்தாறுமூலை ம. ம. வி. | சித்தாண்டி-1 | 1 |
| | 18 | மட்/இந்து வித்தியாலயம் | மட்டக்களப்பு | 1 |
| | 19 | மட்/காத்தான்குடி ம. ம. வி. | இல. 322, கடற்கரை வீதி, புதிய காத்தான்குடி 6 | 1 |
| | 20 | கல்/சம்மாந்துறை ம. ம. வி. (தே. பா.) | சம்மாந்துறை | 1 |
| | 21 | சாஹிரா வித்தியாலயம் (தே. பா.) | சாஹிரா வித்தியாலய வீதி, சாய்ந்தமருது | 1 |
| | 22 | அக்கரைப்பற்று முஸ்லிம் ம. ம. வி. | அக்கரைப்பற்று | 1 |
| | 23 | ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலயம் | அக்கரைப்பற்று | 1 |
| | 24 | விபுலானந்த வித்தியாலயம் | கண்டி வீதி, திருகோணமலை | 1 |

| மாகாணம் | தொடர் இலக்கம் | பாடசாலையின் பெயர் | முகவரி | ஆசிரிய வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|
| | 25 | அட்டாளைச்சேனை ம. ம. வி. | பிரதான வீதி, அட்டாளைச்சேனை | 1 |
| | 26 | திரு/மு/மூதூர் ம. ம. வி. | நொக்ஸ் வீதி, மூதூர் | 1 |
| தென் | 27 | மல்ஹுருஸ்ஸுஹியா தேசிய பாடசாலை | பெரேரா மாவத்தை, காலி | 1 |
| | 28 | சாஹிரா தேசிய பாடசாலை | அம்பாந்தோட்டை | 1 |
| சப்பிரகமுவ | 29 | அல்-அஸ்ஹர் முஸ்லிம் ம. வி. | ஹெம்மாத்தகமை | 1 |
| ஊவா | 30 | அப்புத்தளை தமிழ் ம. வி. | அப்புத்தளை | 1 |
| | 31 | சரஸ்வதி ம. ம. வி. | மஹியங்கனை வீதி, பதுளை | 1 |
| | 32 | பசறை தமிழ் ம. வி. | பசறை | 1 |
| வடமேல் | 33 | ஹிஸ்புல்லா ம. ம. வி. | குருநாகல் | 1 |
| | 34 | சாஹிரா தேசிய பாடசாலை | புத்தளம் | 1 |
| | 35 | கெக்குணகொல்லை முஸ்லிம் ம. ம. வி. | கிரியுல்லை | 1 |
| மத்திய | 36 | மதீனா முஸ்லிம் வித்தியாலயம் | மடவளை பஸார் | 1 |
| | 37 | கதிரேசன் ம. ம. வி. | கொத்மலை வீதி, நாவலப்பிட்டிய | 1 |
| | 38 | இந்து தேசிய பாடசாலை | நுவரெலியா வீதி, புசல்லாவை | 1 |
| | 39 | அல் மனார் ம. ம. வி. | ஹந்தெஸ்ஸ | 1 |
| | 40 | அஜ்மீர் தேசிய பாடசாலை | அல்கடுவ வீதி, உக்குவளை | 1 |
| | 41 | ஹொல்புறூக் தமிழ் ம. வி. | அக்கரப்பத்தனை | 1 |
| | 42 | நோர்வூட் தமிழ் ம. வி. | நோர்வூட் | 1 |
| | 43 | இறாகலை தமிழ் ம. வி. | ஹல்கிரான்ஓயா | 1 |
| | 44 | கேம்பிரிட்ஜ் வித்தியாலயம் | கொட்டகலை | 1 |

**தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்**

| மாகாணம் | தொடர் இலக்கம் | பாடசாலையின் பெயர் | முகவரி | ஆசிரிய வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|
| மேல் | 1 | அல் முபாரக் ம. ம. வி. | மல்வானை | 1 |
| மத்திய | 2 | இந்து தேசிய பாடசாலை | நுவரெலியா வீதி, புசல்லாவை | 1 |
| | 3 | அல் மனார் ம. ம. வி. | ஹந்தெஸ்ஸ | 1 |
| | 4 | அஜ்மீர் தேசிய பாடசாலை | உக்குவளை | 1 |
| | 5 | கதிரேசன் ம. ம. வி. | கொத்மலை வீதி, நாவலப்பிட்டிய | 1 |
| | 6 | ஹொல்புறூக் தமிழ் ம. வி. | அக்கரப்பத்தனை | 1 |
| | 7 | நோர்வூட் தமிழ் ம. வி. | நோர்வூட் | 1 |
| | 8 | இறாகலை தமிழ் ம. வி. | ஹல்கிரான்ஓயா | 1 |
| | 9 | கேம்பிரிட்ஜ் வித்தியாலயம் | கொட்டகலை | 1 |
| தென் | 10 | அரபா தேசிய பாடசாலை | வெலிகமை | 1 |
| | 11 | சாஹிரா தேசிய பாடசாலை | அம்பாந்தோட்டை | 1 |
| வடமேல் | 12 | கெக்குணகொல்லை முஸ்லிம் ம. ம. வி. | கிரியுல்லை | 1 |
| | 13 | சாஹிரா தேசிய பாடசாலை | புத்தளம் | 1 |
| | 14 | ஹிஸ்புல்லா ம. ம. வி. | குருநாகல் | 1 |
| ஊவா | 15 | சரஸ்வதி ம. ம. வி. | மஹியங்கனை வீதி, பதுளை | 1 |
| | 16 | பசறை தமிழ் ம. வி. | பசறை | 1 |
| | 17 | அப்புத்தளை தமிழ் ம. வி. | அப்புத்தளை | 1 |
| சப்பிரகமுவ | 18 | அல்-அஸ்ஹர் முஸ்லிம் ம. வி. | ஹெம்மாத்தகமை | 1 |
| வடக்கு | 19 | மானிப்பாய் இந்து வித்தியாலயம் | மானிப்பாய் | 1 |
| | 20 | நெல்லியடி ம. ம. வி. | கரவெட்டி | 1 |
| | 21 | சாவகச்சேரி இந்து வித்தியாலயம் | சாவகச்சேரி | 1 |
| | 22 | யாழ். இந்து வித்தியாலயம் | யாழ்ப்பாணம் | 1 |
| | 23 | வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை | யாழ்ப்பாணம் | 1 |
| | 24 | வேலணை ம. ம. வி. | வேலணை | 1 |
| | 25 | வட்டு இந்து வித்தியாலயம் | சித்தங்கேணி | 1 |
| | 26 | வயவிலான் ம. ம. வி. | வயவிலான் | 1 |
| | 27 | ஸ்ரீ சோமாஸ்கந்த வித்தியாலயம் | புத்தூர் | 1 |
| | 28 | மெதடிஸ்ட் மகளிர் உயர்தர பாடசாலை | பருத்தித்துறை | 1 |
| | 29 | கிளி/கிளிநொச்சி ம. ம. வி. | ஏ9 வீதி, ஆனந்தபுரம் கிழக்கு, கிளிநொச்சி | 1 |

| மாகாணம் | தொடர் இலக்கம் | பாடசாலையின் பெயர் | முகவரி | ஆசிரிய வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|
6. **விண்ணப்பதாரியின் உறுதியுரை.**- இங்கு தரப்பட்டுள்ள தகவல்கள் என்னுடைய நம்பிக்கைக்கும் அறிவிக்கும் எட்டியவரை உண்மையானவை என உறுதிப்படுத்துகின்றேன். பரீட்சை தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்ட சட்டங்கள், விதிகளின் பிரகாரம் செயற்படுவதற்கும் இப்பரீட்சை தொடர்பான நிபந்தனைகளின் பிரகாரம் நான் தகுதியற்றவன் எனக் காணுமிடத்து இப் பரீட்சைக்கு முன்னர், பரீட்சையின் போது அல்லது பரீட்சைக்குப் பின்னர் என்னுடைய பரீட்சார்த்தி தன்மையை இரத்துச் செய்வதற்காக எடுக்கப்படும் எந்தத் தீர்மானத்திற்கும் நான் உடன்படுகின்றேன்.

----,
விண்ணப்பதாரின் கையொப்பம்.

திகதி :----.

7. பற்றுச் சீட்டு விண்ணப்பத்தில் நேர்த்தியாக ஒட்டப்பட வேண்டும். (பற்றுச் சீட்டின் போட்டோ பிரதியை தம்வசம் வைத்திருக்கவும்.)

(i) இலக்கம் :----.
(ii) திகதி :----.
(iii) கட்டணம் செலுத்திய இடம் :----.
(iv) செலுத்திய தொகை (ரூபா) :----.

8. மேற்பார்வை உத்தியோகத்தரின் சான்றிதழ்.- விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி .......................... எனது முன்னிலையில் இவ்விண்ணப்பப்படிவத்தில் கைச்சாத்திட்டார் என இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

----,
மேற்பார்வை உத்தியோகத்தரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
திகதி :----.

9. **திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :**

இவ் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ................. இவ் விண்ணப்பத்தின் 04(i), (ii), (iii) மற்றும் (iv) ஆம் கட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் இங்கு உள்ள ஆவணங்களுடன் சரியானவை எனவும் உரிய வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட பிரமாணங்களின் பிரகாரம் அவர் இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை உடையவர் என இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

----,
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்காக.

திகதி :----.

இறுதித் திகதியின் பின்னர் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட மொழியில் மாற்றம் செய்ய அனுமதிக்கப்படமாட்டாது.

8-662/1

---

## கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்

### இலங்கை கணக்காய்வு சேவையின் வகுப்பு II தரம் II இன் கணக்காய்வு அத்தியட்சகர்களை ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2014

இலங்கை கணக்காய்வு சேவையின் வகுப்பு II தரம் II இற்கான கணக்காய்வு அத்தியட்சகர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக கீழே 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகளுக்காக இடம்பெறும் திறந்த போட்டிப் பரீட்சை - 2014 நவம்பர் மாதத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் கொழும்பில் நடாத்தப்படும்.

1. **ஆட்சேர்ப்பு முறை.**- இலங்கை கணக்காய்வு சேவையின் வகுப்பு II தரம் II இல் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையில் 20% இற்கு மேற்படாத எண்ணிக்கையான வெற்றிடங்களில் 15 அளவான வெற்றிடங்கள் கீழே 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்களை எழுத்துமூலப் பரீட்சைக்கும் நேர்முகப் பரீட்சைக்கும் உட்படுத்தி அதன் பெறுபேறுகளின் அடிப்படையில் அரசாங்க சேவைகள் ஆணைக்குவினால் நிரப்பப்படும்.

2. **தகைமைகள்.**- எல்லா பரீட்சார்த்திகளும் :

(அ) இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) பின்வரும் தகைமைகளில் ஏதேனும் ஒன்றை உடையவராக இருத்தல் வேண்டும் :

(1) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து கணக்கியலை ஒரு பாடமாகக் கொண்ட பட்டம்

(2) பட்டயம் பெற்ற செயலாளர்கள் நிறுவகத்தின் இணை அங்கத்துவம்

(3) கூட்டிணைந்த செயலாளர் நிறுவகத்தின் இணை அங்கத்துவம்

(4) பொது நிதி மற்றும் வரி அல்லது அதற்கு சமமான துறையில் விஞ்ஞானமானிப் பட்டம்

(5) இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் இடைநிலைச் சான்றிதழ் அல்லது உத்தரவு மட்டச் சான்றிதழைப் பெற்றிருத்தல் அல்லது பின்வரும் தொழில்சார் கணக்காளர் நிறுவனம் ஒன்றிலிருந்து

அதற்குச் சமமான தரத்திலான தகைமையை பெற்றிருத்தல் :-

(i) இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் இல் உள்ள பட்டயக் கணக்காளர் நிறுவகம்

(ii) ஐக்கிய இராச்சியத்தின் பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவகம்

(iii) ஐக்கிய இராச்சியத்தின் சான்றுபடுத்தப்பட்ட பட்டயக் கணக்காளர்களின் சங்கம் அல்லது அதற்குச் சமமான தொழில்சார் நிறுவனம்.

(6) ஐக்கிய இராச்சியத்தின் கிரய மற்றும் கைத்தொழில் கணக்காளர் சங்கத்தின் இணை அங்கத்துவம்

(7) உயர் கல்வி அமைச்சின் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா

(8) இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியின் வர்த்தக டிப்ளோமா

(9) மாதமொன்றுக்கு ரூபா 13,640 இற்குக் குறையாத ஆரம்ப சம்பளத்தினைக் கொண்ட சம்பள அளவுத் திட்டத்திற்குரிய திணைக்களத்தரத்தில் அல்லது இணைந்த சேவையொன்றில் பதவி வகித்து வருகின்ற விண்ணப்பங்கள் முடிவடையும் தேதியன்று அரசாங்க/ மாகாண அரச சேவையில் 10 வருடங்கள் தொடர்ச்சியாக சேவையாற்றி சேவையில் நிரந்தரமாக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர்

(10) விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதியன்று 5 ஆண்டுகள் சேவைக்காலத்துடன் அரசாங்க/ மாகாண சேவையில் அல்லது அரசங்க தொழில் முயற்சியொன்றில் தனது பதவி நிரந்தரமாக்கப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டமொன்றை பெற்ற உத்தியோகத்தர் ஒருவர்

(11) விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதியில் 5 ஆண்டுகள் சேவைக் காலத்துடன் அரசாங்க/ மாகாண பொதுச் சேவையில் அல்லது அரசாங்க தொழில் முயற்சியொன்றில் தமது பதவி நிரந்தரமாக்கப்பட்ட உயர் கல்வி அமைச்சின் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா இடைநிலை சித்தியெய்திய உத்தியோகத்தர் ஒருவர்.

(12) மாதாந்தம் ரூபா 14,980 இற்கு குறையாத ஆரம்ப சம்பளத்துடனான சம்பள அளவுத்திட்டத்தினைச் சார்ந்த அரசாங்க தொழில் முயற்சியொன்றின் பதவியால் சேவையாற்றி வருகின்ற விண்ணப்பத்தினைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதியன்று 10 ஆண்டுகள் தொடர்ச்சியாக சேவையாற்றி பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட உத்தியோகத்தர்.

**குறிப்பு :**

(i) சித்தியெய்துவதற்கு அவசியமான பரீட்சை அல்லது பரீட்சைகளை 2014 செப்தெம்பர் 12 ஆந் திகதியில் அனைத்து அம்சங்களிலும் பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.

(ii) தகைமைகளுக்கு ஆதாரமான உத்தியோகபூர்வ சான்றிதழ் அல்லது அத்தகைய சான்றிதழுக்காக அரசாங்க சேவைகள் ஆணைக்குழு ஏற்றுக்கொள்ளக்கூடிய உத்தியோகபூர்வ ஆவணம் ஒன்றை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பித்தல் வேண்டும்.

3. **சம்பள அளவுத்திட்டம் :-** இப்பதவிக்குரிய மாதாந்த திரட்டிய சம்பள அளவுத்திட்டமானது எஸ்எல்-1, -ரூபா22,935-10X645-8X790-17X1,050-ரூபா53,555 ஆகும். பொது நிர்வாகச் சுற்றறிக்கை 06/2006 இன் படி சம்பளம் செலுத்தப்படும்.

4. **வயதெல்லை.-** 2014 செப்தெம்பர் 12 ஆந் திகதியன்று 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். தற்பொழுது அரசாங்க/ மாகாண அரச சேவையில் உள்ளவர்களுக்கு இந்த வயதெல்லை ஏற்புடையதாகாது.

**5. தேக ஆரோக்கியம் மற்றும் ஏனைய சேவை நிபந்தனைகள் :**

(அ) சகல பரீட்சாத்திகளும் சிறந்த தேக ஆரோக்கியம் உடையவராகவும் நல்லொழுக்கமுடையவராவும் இருத்தல் வேண்டும்.

(ஆ) நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு கடப்பாடுடையவராதல் வேண்டும்.

(இ) இப்பதவிக்காக ஆட்சேர்க்கப்படும் உத்தியோகத்தர்கள் பொது நிர்வாகச் சுற்றறிக்கை 01/2004 இன் படி சேவையில் இணைந்து குறித்த பிரகாரம் இரண்டாம் மொழித் தேர்ச்சியை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

(ஈ) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமான பதவியாவதுடன் மூன்றாண்டு தகுதிகாண் காலத்திற்கு / ஒரு ஆண்டு பதிற்கடமை காலத்திற்கு உட்பட்டதாகும்.

**6. பரீட்சை முறை :**

(அ) பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

(ஆ) பரீட்சார்த்தி அவர் பரீட்சையில் சித்தியடைவதற்குத் தகைமை பெற்ற மொழியில் அல்லது அரச கரும மொழியில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

(இ) பரீட்சார்த்தி தகைமைபெற்ற பரீட்சைக்கான பாடங்கள் இரண்டு மொழிகளில் அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையான மொழிகளில் சித்தியடைந்திருந்தால் அப்பரீட்சையில் அவர் சித்தியடைந்த அதிக எண்ணிக்கையான பாடங்களுக்குத் தோற்றிய மொழியில் அல்லது அரச கரும மொழியில் எழுதுதல் வேண்டும்.

(ஈ) பிரதான பாடத்தை ஒரு மொழியிலும், துணைப் பாடத்தை இன்னொரு மொழியிலும் சித்தயடைந்துள்ள சிறப்புப் பட்டம் பெற்ற பரீட்சார்த்தி, அவர் பிரதான பாடத்தில் சித்தியடைந்த மொழியில் அல்லது அரச கரும மொழியில் இப்பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

**குறிப்பு :**

(i) மேலே(ஆ) மற்றும் (இ) யில் குறிப்பிடப்பட்ட "தகைமை பெற்ற பரீட்சை" என்ற சொற்றொடர் கருதுவதாவது 02 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட பரீட்சைகளில் ஒன்றாகும்.

(ii) பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றும் எல்லா வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியில் விடையளித்தல் வேண்டும்.

(iii) பரீட்சார்த்தி தமது விண்ணப்ப படிவத்தில் குறிப்பிடப்பட்ட பரீட்சை மொழியை மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

7. **எழுத்து மூலப் பரீட்சையின் பாடத்திட்டம்**.- பின்வரும் ஆறு பாடங்களுக்காக மூன்று மணித்தாயால ஆறு எழுத்துமூல வினாத்தாள்களைக் கொண்டுள்ளதுடன் ஒவ்வொரு வினாத்தாளிற்கும் 100 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

(i) கணக்கியல்
(ii) கணக்காய்வு
(iii) வணிகக் கணிதம்
(iv) கிரயக் கணக்கியல்
(v) பொருளாதாரமும் அரசாங்க நிதியியலும்
(vi) பொது வர்த்தக அறிவும் வர்த்தக எண்கணிதமும்
அல்லது
(vii) அரசாங்க நிதிப் பிரமாணமும் நிதி நடைமுறைகளும்

மேலே (i) முதல் (v) வரையான வினாப்பத்திரங்களுக்கு மேலதிகமாக இவ் அறிவித்தலின் 02 (ஆ) இல் (1) முதல் (8) வரையான பந்திகளின் கீழ் தகமை பெறும் விண்ணப்ப தாரிகள் (vi) ஆம் வினாப் பத்திரத்திற்கு விடையளிக்க வேண்டியதுடன் 02 (ஆ) இல் (9) முதல் (12) வரையான பந்திகளின் கீழ் தகைமை பெறும் விண்ணப்பதாரிகள் (vii) ஆம் வினாப் பத்திரத்திற்கு விடையளிக்க வேண்டும்

பாடவிதானம் :

(I) கணக்கியல் :- கீழுள்ள தலைப்புக்களில் 3 மணித் தியால வினாத்தாள்
(சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்).

கணக்கியல் தத்துவங்கள், உற்பத்திக் கணக்குகள், வியாபாரக் கணக்குகள், இலாப நட்டக் கணக்குகள், ஐந்தொகை, தொங்கற் கணக்குகளும், பிழைகளைச் சீராக்கல் செய்தலும், ஒற்றைப் பதிவும் பூர்த்தி யாக்கப்படாத பதிவேடுகளும், மொத்த கணக்குகள், இருப்பு மதிப்பீடு, பெறுவனவு கொடுப்பனவுக் கணக்குகள், வருமான செலவினக் கணக்குகள், அட்டுறு அடிப்படையிலான கணக்கீடு, மூலதன மற்றும் வருமான செலவினங்கள், தேய்மானமும் காலக் கழிவும் அருகுதலும், பங்குடமை கணக்கீடு, ஏற்பாடுகளும் ஒதுக்கீடுகளும், கூட்டு முயற்சிகள், நாணயமாற்று உண்டியல்கள், வரையறுக்கப்பட்ட கம்பனிகள், அரச கூட்டுத்தாபனக் கணக்குகள், ஒப்படைக் கணக்குகள், விற்பனை இன்றேல் திரும்பல் பொருட்கள், கொள்கலன் கணக்குகள், கிளைக் கணக்குகள், திணைக்களக் கணக்குகள், வாடகைக் கொள்வனவுக் கணக்குகள், முதலீட்டுக் கணக்குகள், இறைக் கணக்குகள்

(II) கணக்காய்வு : கீழுள்ள தலைப்புக்களில் 3 மணித் தியால வினாத்தாள்
(சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்).

கணக்காய்வு தொடர்பான பொது தத்துவங்களும் கோட்பாடுகளும்
கணக்காய்வு வகைகள் : உள்ளகக் கணக்காய்வு, புறக் கணக்காய்வு, நியதிக் கணக்காய்வு, தனியார் கணக்காய்வு, ஐந்தொகைக் கணக்காய்வு, இடைக்காலக் கணக்காய்வு, இறுதிக் கணக்காய்வு, அரசாங்க கணக்காய்வு, தனியார் தொழில் முயற்சிகளின் கணக்காய்வு என்பன.

உள்ளக மற்றும் புற கணக்காய்வாளர்களின் கடமைகள், அவர்களின் தொடர்புகள், அவர்களின் பொதுவான பண்புகள், சுதந்திரம்

அகக்கட்டுப்பாடும் செவ்வையும் :- அகக் கட்டுப்பாட்டு முறைமைகளை மீளாய்வு செய்தல், பதிவுசெய்தல், தொடக்க மதிப்பிடுதலும் உறுதிப்படுத்துதலும் இறுதி மதிப்பிடுதலும், பகுப்பாய்வு கணக்காய்வு, அமைப்பு வரைபடங்களும் பாய்வுப் பட்டிகளும் ஆழக் கணக்காய்வும்.

சான்றுறுதிப்படுத்தல் :- மூலதன, வருமான செலவு களை வகைப்படுத்தல், மாதிரித் தெரிவுக்கான முறைமைகளும் உத்தி முறைகளும் மோசடி, பிழைகளைக் கண்டுபிடித்தலும் தடுத்தலும்.

விற்பனைக் கணக்காய்வு :- வருமதியாளரினதும், பெறுவனவுகளினதும் நடைமுறை, கடன் கொள்வனவு களினதும் கொடுப்பனவுகளினதும் நடைமுறை, சம்பளப்பட்டியல் நடைமுறை, கிரயமும் பொருட் பதிவேடுகளும் கணக்கு ஏடுகளும் இடைநிலை மற்றும் இறுதி கணக்குகளும்.

சொத்துக்களையும் பொறுப்புக்களையும் செவ்வை பார்த்தல் :- நிலையான சொத்துக்கள், இருப்பு கடன்பட்டோர், பணம், பொறுப்புக்கள், நிகழ்த்தக்க பொறுப்புக்கள், நிகழாத்தக்க பொறுப்புக்கள், முதலியவை தொடர்பான உரிமை, உள்ளமை, மதிப்பீடு என்பன.

வரையறுக்கப்பட்ட கம்பனிகள் :- வரையறுக்கப்பட்ட கம்பனிகளின் நியதிச்சட்ட ஏடுகள், பணிப்பாளர்களின் அதிகாரங்களும் கடமைகளும், பகிரக்கூடிய இலாபம்.

அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் :- கணக்காய்வாளரின் நியமனமும், ஊதியமும், நீக்கமும் புதுக்கணக்காய்வை ஒப்புக்கொள்ள முன்பான நடவடிக்கை

கணக்காய்வாளரின் அதிகாரங்களும், கடமைகளும், கணக்காய்வாளரின் பொறுப்பும் :-
அக மற்றும் புற கணக்காய்வுகளை ஒழுங்கமைத்தலும் கட்டுப்பாடுகளும், கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்கள், அகக் கட்டுப்பாட்டு வினாக்கொத்துக்கள் மற்றும் பாய்ச்சற் கோட்டுப் படங்கள்.

இயந்திர மயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமையின் கணக்காய்வு :
அகக் கணக்காய்வு, செயலாற்றல் கணக்காய்வு, முகாமைத்துவக் கணக்காய்வு, தொழிற்பாட்டு கணக்காய்வு, முறைமைக் கணக்காய்வு, பணப் பெறுமதி கணக்காய்வு.

புலனாய்வுகள் :

(III) வணிகக் கணிதம் : பின்வரும் தலைப்புக்களில் 3 மணித்தியால வினாத்தாள் (சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.)

தொடர்கள் : கூட்டல் விருத்தி, பெருக்கல் விருத்தி ஈருறுப்ப மாறியும், சார்பற்ற மாறியும், கூட்டுவட்டியும், கழிவிடுதல் சூத்திரமும், அவற்றைக் கண்டறிதலும்.

சமன்பாடுகள் : ஒருபடிச் சமன்பாடுகளும், இருபடிச் சமன்பாடுகளும், அவற்றின் தெளிவு விளக்க வரைபுகளும், உயர்வு, இழிவுப் புள்ளித் தீர்வுகளில் அவற்றைப் பிரயோகித்தலும்.

தரவு : தரவுகளை சேகரித்தலும் ஒழுங்குபடுத்தலும், செம்மைப்படுத்தலும் சரியான வரையறையும், சந்தை ஆராய்ச்சியும் அதற்குரிய தரவுகளை சேகரித்தலும்.

சமர்ப்பித்தல் : அறிக்கைகளைச் சமர்ப்பித்தலும் புள்ளி விபரத் தகவல்களைப் பயன்படுத்தலும், புள்ளி விபரத் தகவல்களின் பகுப்பாய்வும், அதனைத் தொழில் நுணுக்கம் அற்ற மொழியில் விளக்குதலும், மடக்கை வரைபடங்களுட்பட வரைபடங்களும் வரை வடிவங்களும்.

(IV) கிரயக் கணக்கியல்.- பின்வரும் தலைப்புக்களில் 3 மணித்தியால வினாத்தாள் சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

பொருட்கள் :
கொள்வனவு : பொருட்களின் விபரப்பட்டியல், பொருட்களை கோரிக்கையிடுதல், கட்டளையிடுதல் மற்றும் பின்தொடர் நடைமுறைகள்.

பொருட்களைப் பொறுப்பேற்றல் :- பொருட்களைப் பெறுதல், அவற்றின் கணியம், தரம் மற்றும் மாதிரி முதலியவற்றைச் செவ்வைப் பார்த்தல் முறைகள்.

பொருட்களை வகைப்படுத்தல் : மூலப் பொருட்கள், புத்துருவாகும் வேலைகள், பூர்த்தி செய்யப்பட்ட பொருட்கள், பொதி கட்டும் பொருட்கள், பேணுகைப் பொருட்கள், மாதிரிகளும் கருவிகளும் பிற நேரில் பொருட்கள் ஆகியவற்றை வகைப்படுத்தலும் குறியிடுதலும்.

களஞ்சியம் : திட்டமிடல், களஞ்சியப்படுத்தல் முறைகள், மூலப் பொருட்களும் புத்துருவாகும் வேலைகள், பூர்த்தி செய்யப்பட்ட பொருட்கள், பொதி கட்டும் பொருட்கள் ஆகியவற்றிற்கான களஞ்சியம், மாதிரிகள், கருவிகள், பராமரிப்பும் பேணலும், ஏனைய நேரில் பொருட்கள் ஆகியவற்றின் களஞ்சியம், ஒரு முகப்படுத்திய பண்டகசாலைகள் பன்முகப்படுத்திய பண்டகசாலைகள், உப பண்டகசாலைகள், உள்ளகப் போக்குவரத்து மற்றும் பொருட்களை ஏற்றி இறக்குவதற்கான இயந்திர உபகரணங்கள்.

களஞ்சியப்படுத்தல் : பெற்றுக்கொள்ளல், விநியோகித்தல், இருப்புகளை களஞ்சியத்திலிருந்து மாற்றுதல், திருப்பியவை, கட்டளைகள், ஒதுக்கீடுகளும் விடுவிக்கப்பட்ட மீதிகளை பதிதலும், வழங்குநர்களுக்கு திருப்பியவை, கழிவு மற்றும் விரயப் பொருட்களை கையாளும் முறை.

இருப்புக் கட்டுப்பாடு : உச்ச, இழிவு, மறுகட்டளை மட்டங்கள், கட்டளை இடும் கணியங்கள், அழியும் பொருட்கள் மீதான கட்டுப்பாடு, விரயத்தைத் தடுத்தல், மெதுவாக அசையும், அசைவற்ற, வழக்கிலில்லாத இருப்பை மீளாய்வு செய்தல்.

தொகை இருப்பெடுத்தல் : கையிருப்பு எடுத்தலை ஒழுங்குபடுத்தல், படிவங்களைத் தயாரித்தல், பொருட் பதிவேடுகள் மீதான கட்டுப்பாடு, உருப்படி இருப்புக்களைப் பதிதல், விலையிடுதல், பொருட் பதிவேடுகளை நிரப்புவதும் சுருக்கக் கூற்று தயாரிப்பதும் நித்திய பொருட் பட்டோலையும் தொடர்ச்சியான இருப்பெடுத்தலும், வேறுபாடுகளின் புலனாய்வும், அவற்றைக் கையாளும் முறையும்.

பொருட் கிரயவியல் : கிரயத்தைக் கணக்கிடுதல் மற்றும் பொருட்களை விலையிடுதல் முறைகள், கிரய நிலையத்திற்கும் அலகுகளுக்கும் ஒதுக்கீடு, பொருட்களின் சுருக்கக்கூற்று, தொக்கு பேரேடுகள்.

பொருட்கிரயம் :- முடிவுப்பொருள் ஒன்றுக்கான கிரயம், பழுதுள்ள பொருட்களின் கிரயம்.

கூலி:
வேலை அறிக்கைகள்: நேரம், வெளியீடுகள் ஆகியவற்றைப் பதிதல், ஏடுகளின் வகைகள், குறையுள்ள வேலை, இழந்த நேரம்.

ஊதியம் : ஊதிய முறைகள், ஊக்குவிப்புக்களும் வெளியீட்டு அடிப்படையில் கொடுப்பனவும், வேலைப்படிப்பு, நியம வீதங்களைத் தீர்மானித்தல்.

வேலை மதிப்பீடு: சிறப்புத் திறன் வீதமிடல், குறையுள்ள வேலைகளுக்கான தள்ளுபடி

மேலதிகப் படிகள் :
சம்பளப் பட்டியல் நடைமுறைகள் :- மொத்த உழைப்புக்களைக் கணக்கிடுதலும் சான்றுறுதிப் படுத்தலும், நியதிச்சட்ட மற்றும் தன்னிச்சையான கழிப்பனவுகள், சம்பளப் பட்டியல் முறைகளும் செயல்முறைகளும், கொடுப்பனவு நடைமுறைகள், சம்பளப் பட்டியல் சுருக்கக் கூற்றுக்கள்.

கூலிக் கிரயவியல் : கிரய நிலையங்களுக்கும் கிரய அலகுகளுக்கும் வகைப்படுத்தலும், ஒதுக்கீடும் பகுத்தீடும், கிரய வீதங்களைக் கணக்கிடுதலும்.

*கூலிக் கிரயக் கட்டுப்பாடுகள் :* வெளியீட்டின் அலகுகள், நேர்க் கூலி வினைத்திறன், அளவைகள், மிகையூதியம், உழைப்புக்களின் அளவு, மேலதிக நேரமும் இழந்த நேரமும், நேர்க் கூலிக்கும் நேரில் கூலிக்குமிடையிலான விகிதாசாரம், குறையுள்ள வேலையின் கிரயம்

*மேந்தலைகள் :*
பொது :- மேந்தலைகளின் தன்மையும் வகைகளும், ஆராய்ச்சி அபிவிருத்தி, திட்டமிடல், கொள்வனவு, உற்பத்தி, ஆளனி, விற்பனை விநியோகம், நிர்வாகம், நிதி, நிலையான, அரைமாறும் மற்றும் மாறும் மேந்தலைகள்.

*சேகரித்தல் :* வகைப்படுத்தலும் கோவைப்படுத்தலும், பல்வேறு விடயங்கள் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்கையில் நடப்பு நிலைமை செல்வாக்குச் செலுத்தும் முறை, மூலப் பதிவேடுகள் தொடர்பான அறிக்கை, மேந்தலை கணக்கீட்டுப் பதிவுகளும் சுருக்கக் கூற்றுக்களும்.

*ஒதுக்குதல் மற்றும் பகிர்வுசெய்தல் :* கிரய நிலையங்களுக்கும் கிரய அலகுகளுக்கும் ஒதுக்குதல் மற்றும் பகிரும் முறைகள்

*உறிஞ்சுதல் :* அலகுக் கிரயத்தில் மேந்தலைகளை உறிஞ்சும் முறைகள், வெளியீட்டு மட்டங்களில் மேந்தலைச் செலவினங்களை உறிஞ்சுதலின் தாக்கம், குறைத்தும் கூட்டியும் உறிஞ்சுதல், அதற்கான காரணிகளும் கையாளுதலும்.

*சேவைகள் :* பராமரிப்பு உட்பட சேவைகளின் உபயோகத்தை அளவிடுதல், கிரயத்தை பதிதலும் கிரய நிலையங்களுக்கு தாக்கல் செய்வதும்.

*பொறியும் இயந்திரமும்*
பொறிகள் மற்றும் இயந்திரங்கள் தொடர்பான அறிக்கை, பெறுமானத் தேய்வு, அவற்றின் பாவனை மற்றும் அவற்றின் செயலாற்றல் என்பன.

*கிரயவியல் நுட்பங்கள்:*

*கிரயவியல் வகைகள் :*
உற்பத்திப் பொருட் கிரயத்தைத் தேர்ந்தெடுத்துத் தொகுத்தலும் பணிக்கிரயவியலுக்கான (ஒப்பந்தம், தொகுதி ஆகிய இரண்டையும் உள்ளடக்கி) முறைகளும், நடைமுறைகளும் (உற்பத்தி பொருட் கிரயத்தைத் தேர்ந்தெடுத்துத் தொகுத்தலும் தொழிற்படு கிரயமும் உள்ளடக்கிய) செய்முறைக் கிரயவியலின் முறைகளும் நடைமுறைகளும்.

*கூட்டு உற்பத்தி பொருட்களும் உப உற்பத்திப் பொருட்களும் :* கூட்டு உற்பத்தி பொருட்களும் உப உற்பத்திப் பொருட்களும் இடையிலான வேறுபாடு, கணக்கியல் முறைகள், பதிவிடுதலில் மாறுபட்ட முறைகள், மாறுபட்ட பகுத்தீட்டு அடிப்படைகள், உபயோகித்த கிரயத்தையும், பெறுமதியையும் சேகரித்தல் வரையறைகளும் செய்முறைத் தன்மைகளும்.

*விரயம் :* விரயக் கிரயவியல், கெட்டுப் போனவைகள், பழுதுள்ள வேலை, திருத்துதல், விளைவற்ற நேரமும் விளைவற்ற வசதிகளும்.

*காரியங்கள் :* ஆராய்ச்சி, அபிவிருத்தி திட்டமும் முன் உற்பத்தியும், கொள்வனவு, ஆளணி, உற்பத்தி, சந்தைப்படுத்தல், பரிபாலனம் நிதி முதலியவற்றின் கிரயவியல்

பாதீட்டுக் கட்டுப்பாடும், நியமக் கிரயவியலும்.

*பாதீடும் நியமங்களும் :*
பிரதான பாதீடு, உப பாதீடு, பயன்படுத்தக்கூடிய பாதீடு, பாதீட்டுக் கைநூல், நியமக் கிரய வீதங்கள், நிலையான மற்றும் நெகிழத்தக்க பாதீடுகள், நியம உற்பத்திப் பொருட் கிரயங்கள்.

*சேகரித்தலும் பகுப்பாய்வும் :* நியமங்கள் மற்றும் பாதீடுகளுடன் ஒப்பிடுவதற்காக உள்ளபடியான செலவினமும் வெளியீடுகளும்.

*முரண்கள் பகுப்பாய்வு :* கிரயங்களின் எல்லா மூலகங்களினதும் இடைத்தர நிலையிலுள்ள மொத்த முரண்களின் பகுப்பாய்வு.

*எல்லை கிரயவியல் :*
எல்லைக் கிரயவியல் நுட்பங்களும் இடைத்தர மட்டத்தில் எல்லைக் கிரயத்தினை தயாரித்தல்

*சமர்ப்பித்தலும் உபயோகமும் :*
*செய்முறைக்கும் திணைக்களங்களுக்குமான தொழிற்பாட்டு கூற்றுக்கள் :-* சமர்ப்பித்தல் முறைகள், வாய்மொழி மூலமும், சுருக்கக் கதை வடிவிலும், அட்டவணையிலும் வரைபடங்கள் மூலமும் பிற உருவங்கள் மூலமும் ஆன முறைகள், தொடர்ச்சியானதும் குறித்த காரியத்திற்கானதுமான ஆவணங்களும் சமர்ப்பித்தலும்.

(V) பொருளியலும் அரசாங்க நிதியும் : கீழுள்ள தலைப்புக்கள் தொடர்பாக 3 மணித்தியால வினாத் தாள் (சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்)

*பெறுமதிக் கோட்பாடு :* கேள்வியும் நிரம்பலும், விலைப் பொறிமுறை, நிறை போட்டிகள், தனியுரிமை, சிக்கன வாடகை, தொழிலும் கூலிவீதங்களும், மூலதனமும், வட்டி வீதங்களும், வரிசையின் விபரணம், சமநிலைக் கோட்பாடு, விலையிடுதல் முறைகளுக்கு அப்பாற்பட்ட சமூகக் கிரயங்களும் இலாபங்களும்.

*உற்பத்தி :* நிறுவனக் கோட்பாடு, உற்பத்திக் காரணிகளில் முகாமை, மூலதனப் பிரயோகம், நிலையான மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் உற்பத்திக்கும், விநியோகத்திற்குமான ஒழுங்கு படுத்தல், கைத்தொழிலின் அமைவிடம், விசேடமான வணிக அபிவிருத்தியினதும் தொழிலினதும் வகுப்பு, காரணி பதிலீடும் ஒப்பீட்டு நன்மைகளும், தேசிய மயப்படுத்தல்.

*காசும் வங்கித் தொழிலும் கடனும் நிதியும் :* பணத்தின் தொழிற்பாடு, பணத்தின் வகைகள், வங்கித் தொழில் பொறிமுறை, மத்திய வங்கி, இங்கிலாந்து வங்கி, வணிக வங்கிகள், நிதி இல்லங்கள், கழிவீடு இல்லங்கள், வாடகைக் கொள்வனவு, ஆயுட் காப்புறுதி, சேமலாப நிதியம், ஓய்வூதிய நிதியம், மூலதனச் சந்தை.

*சந்தைகள் :* உள்ளூர், தேசிய, சர்வதேச வியாபாரமும் சுங்கத் தீர்வைப் பட்டிகளும், கோட்டாக்களும்.

*சர்வதேச வியாபாரம் :* சர்வதேச வியாபாரக் கோட்பாடு தங்க நியமமும் பிந்திய முறைமைகளும், ஸ்ரேலிங் வலயம், கடின நாணய வலயம், சர்வதேச நாணய நிதியம், மீள் நிர்மாணத்திற்கும் அபிவிருத் திக்குமான சர்வதேச வங்கி (உலக வங்கி) சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனமும், சர்வதேச அபிவிருத்திச் சங்கம், ஆசிய அபிவிருத்தி வங்கி, வியாபாரம், தீர்வை என்பன மீதான பொது உடன்படிக்கை (ஜீ.ஏ.ரீ.ரீ) ஐரோப்பிய பொருளாதார சமூகம், இரு பக்க வியாபாரம், வழங்குநர் கடன், உதவிக் கழக ஒன்றியம்.

*தேசிய வருமானமும், அரசாங்கத் தலையீடுகளும் :* தேசிய வருமான அளவுகளும் புள்ளி விபரத் தரவுகளும், அரசின் பங்கு, நாட்டின் பொருளாதார வளர்ச்சி, சேமிப்புக்களும் முதலீடுகளும், வியாபாரத் தொழிற்பாட்டு மட்டங்களின் மாற்றங்கள் வேலையின்மை, கொடுப்பனவு மீதிகளும் ரூபாவின் உறுதிநிலையும் பணவீக்கம், பணச்சுருக்கம், ஆகியவற்றின் தாக்கம், கடன் ஆக்கமும் மத்திய வங்கியின் கட்டுப்பாடும், பிற நாட்டு வியாபாரம் சர்வதேச போட்டி வங்கியின் கட்டுப்பாடும், பிற நாட்டு வியாபாரம் சர்வதேசப் போட்டி முதலியவற்றின் தாக்கம் வியாபாரக் கொடுப்பனவுகளும் உடன் படிக்கைகளும் ஊசலாடும் கடன்கள், ஏற்றுமதி இறக்குமதித் தீர்வைகள், கோட்டாக்கள் இறக்குமதிக் கட்டுப்பாடு, பொருளாதாரத்தை ஒழுங்குபடுத்து வதற்காக பிற அரச நடவடிக்கைகள்.

வரி விதிப்பு கோட்பாடும் அரசிறைக் கொள்கையும் :- நேரடி வரிகள், நேரில் வரிகள், வரியில்லா வருமானம், உதவிப் பணங்கள், வரி அமைப்பினூடாக பொருளா தார ஊக்குவிப்புக்களுக்குரிய ஏற்பாடுகள், வரி நிருவாகக் கிரயம்.

*அரச பாதீடுகளுக்கு நிதியளிக்கும் மூலங்கள் :* வரிகளும் வரியில்லா வருமானமும், ரூபாக் கடன்கள். வெளிநாட்டுக் கடன்கள், கொழும்புத்திட்டம், ஐக்கிய நாடுகளின் முகவர்கள் முதலியவற்றின் மானியங்கள், பிற உதவி மூல வளங்கள் என்பன.

(VI) பொது வர்த்தக அறிவும் வர்த்தக கணிதமும் : *கீழ்வரும் விடயங்களில் 3 மணித்தியால வினாத்தாள் (சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்).*

*வியாபார அமைப்பும் முகாமையும் :* தனி வியாபாரிகள், பங்குடமைகள், கூட்டுத்தொக்குக் கம்பனிகள், தனியார், பொது உடமைக் கம்பனிகள், அரச கூட்டுத்தாபனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், உள்ளூராட்சி அதிகார சபைகள்.

*பரிமாற்றத்தக்க சாதனங்கள் :* நிதி மூலங்கள், நிலையான மூலதனம், தொழிற்படு மூலதனம், குறுகிய மற்றும் நீண்ட கால கடன் பெறல், நிதிசார் நிறுவனங்களும் அவற்றின் பணிகளும்.

*வெளிநாட்டு வியாபாரம், பொருட் சந்தைகள்.*

வியாபாரக் காப்புறுதி உட்பட காப்புறுதிக் கோட்பாடுகள், பிணைகளும் பங்குகளும், எளிய வட்டியும் கூட்டு வட்டியும், சராசரிகளும் இடைகளும், ஒருபடி இருபடிச் சமன்பாடுகளும் அவற்றின் வரைபட விளக்கச் சமர்ப்பித்தல்களும்.

(VII) அரசாங்க நிதிப் பிரமாணங்களும் நிதி நடைமுறை யும் : *கீழ்வரும் விடயங்களில் 3 மணித்தியால வினாத்தாளொன்று (சகல வினாக்களுக்கும் விடை யளித்தல் வேண்டும்).*

வருமானம், செலவினம் ஆகியவற்றுடன் தொடர்புள்ள அரசாங்க நிதிப் பிரமாணங்களும் நிதி நடைமுறை களும், வருடாந்த குறை நிரப்பு மதிப்பீடுகள், கடன் நிதியங்கள், பொதுப்படு கடன், தாபனங்கள், பண்டங்களும் கேள்விகளும், கட்டுநிதிகளும் முற்பணங்களும், நிதி அங்கீகாரம் தீவின் கணக்குகள் பொருளாதாரமும் கருமப்பாடு சார்பானதும் வகைப்படுத்தல்கள், நிகழ்ச்சித்திட்ட பாதீடு மற்றும் செயலாற்றல் பாதீடு, நிதியமைச்சர், திறைசேரி, திட்டமிடல் அமைச்சு, அமைச்சுக்களின் செயலாளர் கள், மதிப்பீட்டுக் குழுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதி, பொதுக் கணக்குகள் குழு ஆகியவற்றின் செயற்பாடுகள், அரசாங்கத்தின் நிதிப்பிரமாணங்கள், நிதி நடைமுறைகள் சம்பந்தப்படும் வகையிலான பொது அறிவு.

*8.* **நேர்முகப் பரீட்சை.-** எழுத்துமூல பரீட்சைக்காக ஒவ்வொரு வினாத்தாளிலும் ஆகக் குறைந்தது 40% புள்ளிகளைப் பெறுகின்ற அத்துடன் முழு பரீட்சைக்குமாக சராசரியாக ஆகக் குறைந்தது 45% புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகளில் கூடிய மொத்த புள்ளிகளைப் பெறுபவர்கள் (வெற்றிடமாகவுள்ள எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கையானவர்கள்) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையினால் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர். எல்லா பரீட்சார்த்திகளினதும் தகைமைகள், சான்றிதழ்களையும் பதவிக்கான உடலியல் தகைமையினையும் பரீட்சிப்பதற்கும் மாத்திரமே நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். நேர்முகப் பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

*9.* **பரீட்சை நிபந்தனைகள்:**

(i) *பரீட்சைக் கட்டணம் :-* இப்பரீட்சைக்கான கட்டணம் 500 ரூபா ஆகும். இப்பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமான தலைப்பு 2003-02-13 இற்கு செலவு வைக்கப்படுவதற்கான அறிவுறுத்தலுடன் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்திற்கு முன்னர் அண்மையிலுள்ள பிரதேச செயலகம் அல்லது மாவட்ட செயலகத்தில் செலுத்தப்பட வேண்டும். அந்த அலுவலகத்தில் இருந்து பெறப்பட்ட பற்றுச்சீட்டு தமது விண்ணப்பப் பத்திரத்தில் கழறாதவாறு ஒட்டப்படல் வேண்டும். இப்பரீட் சைக்காகச் செலுத்தப்படும் கட்டணம் எக்காரணத்தைக் கொண்டும் முற்றாகவோ அல்லது பகுதியளவிலோ மீளச்

செலுத்தப்படமாட்டாது. பற்றுச்சீட்டின் போட்டோ பிரதியினை தன் வசம் வைத்துக் கொள்வது பின்னர் பயனளிக்கக் கூடியதாகும்.

(ii) விண்ணப்பிக்கும் முறை :-

(அ) விண்ணப்பமானது இந்த அறிவிப்புடன் இணைக்கப் பட்டிருக்கும் மாதிரி படிவத்திற்கு ஏற்ப தயாரிக்கப்பட்டு "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தாபனங்கள் மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் கிளை, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், த.பெ.இல. 1503, கொழும்பு" என்னும் முகவரிக்கு 2014 செப்தெம்பர் 12 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். இத் திகதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படமாட்டாது.

(ஆ) அரசாங்க சேவையில்/ மாகாண அரச சேவையில்/ அரசாங்க கூட்டுத்தாபன சேவையில் கடமையாற்றும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை தமது திணைக்களங்களின் தலைவர்கள்/ நிறுவனத் தலைவர்கள் ஊடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பத்தைக் கொண்டுள்ள கடித உறையின் மேற்பக்க இடது மூலையில் "திறந்த போட்டிப் பரீட்சை கணக்காய்வு அத்தியட்சகர் - 2014" என்ற வாசகங்கள் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பப்படிவமானது விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமைபெற்றுள்ள மொழியிலேயே நிரப்பப்படுதல் வேண்டும்.

(உ) தலைப்பு 01 முதல் 06 வரையான பந்திகள் முதலாம் பக்கத்திலும் தலைப்பு 07 முதல் 09 வரையான பந்திகள் இரண்டாம் பக்கத்திலும் மிகுதி 3, 4 ஆம் பக்கங்களிலும் வரத் தக்கவாறு விணப்பப் படிவங்கள் தயாரிக்கப்பட்டு விண்ணப்பதாரராலேயே தெளிவான எழுத்தில் நிரப்பப்படுதல் வேண்டும். மாதிரிப் படிவத்துடன் இணங்காத விண்ணப்பங்கள் பூரண மற்ற தகவல்களை உள்ளடக்கிய விண்ணப்பங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படுவதுடன் விண்ணப்பப் படிவத்தின் நிழற்பட பிரதியொன்றை கைவசம் வைத்திருத்தல் பின்னர் உபயோகப்படலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பம் பரீட்சை அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரிக்கமைவானதா என பரீச்சித்துப் பார்த்தல் வேண்டும் அவ்வாறு அமைவுறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ஊ) விண்ணப்பப் படிவத்தினை தயாரிக்கையில் அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பங்களில் தமிழிற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் எழுதப்படுதல் வேண்டும்.

(எ) கையொப்பங்களை சான்றுபடுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட நபரினால் விண்ணப்பதாரியின் கையொப்பம் சான்றுபடுத்தப்படல் வேண்டும். தற்பொழுது அரசாங்க/ மாகாண அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் தமது கையொப்பங்களைத் தமது திணைக்களத் தலைவர்களால் அல்லது அவர் சார்பில் அவ்வாறு செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலகர் ஒருவரினால் அத்தாட்சிப் படுத்தல் வேண்டும். ஏனைய விண்ணப்பதாரிகளின் கையொப்பம் சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் அல்லது பணிப்பாளாரால் முகாமை செய்யப்படும் பாடசாலையின் அதிபர், ரூபா 240,360 அல்லது அதற்கு மேற்பட்ட வருடாந்த திரட்டிய சம்பளம் பெறும் அரசாங்க உத்தியோகத்தர், பௌத்த விஹாரையின் விஹாராதிபதி அல்லது சங்கைக்குரிய பிரதம குரு, ஏனைய வேறு மதத்தைச் சார்ந்த அல்லது வணக்கஸ்தலங்களில் முக்கிய பதவி வகிக்கும் மதகுரு, முப்படைகளின் கட்டளைத் தளபதி பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவி வகிக்கும் அலுவலகர் ஆகியோரில் எவரினாலும் அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்.

10. **பரீட்சைக்கு அனுமதியளித்தல்:**

(அ) உரிய பிரகாரம் விண்ணப்பங்களை அனுப்பி வைத்த விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகளை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் வழங்குவார். "அனுமதி அட்டைகள்" வழங்கப்பட்ட உடன் செய்திப்பத்திரிகைகளில் அது பற்றி அறிவித்தல் கொடுக்கப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2, 3 நாட்கள் கடந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கவில்லையாயின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு அது குறித்து பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். அதன்போது உங்களது முழுப் பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் பரீட்சையின் பெயரைக் குறிப்பிட்டு இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தில் வினவுமாறு அறிவிப்பதுடன், நீங்கள் கொழும்புக்கு வெளியேயுள்ள விண்ணப்பதாரியாயின் உங்களது அந்த விபரங்களுடன் பெக்ஸ் மூலம் அனுமதி அட்டையின் பிரதியொன்றை உங்களுக்கு அனுப்பி வைப்பதற்காக உங்களது பெக்ஸ் இலக்கமொன்றையும் குறிப்பிட்டு அறிவித்தலில் வழங்கப்பட்டுள்ள பெக்ஸ் இலக்கத்திற்கு அறிவிப்பது பொருத்தமானதாகும். அவ்வாறு வினவுகையில் தேவையான போது சமர்ப்பிப்தற்காக உங்களிடம் வைத்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணத்திற்கான பற்றுச் சீட்டின் பிரதி மற்றும் விண்ணபத்தை தபாலிடுகையில் வழங்கப்பட்ட பதிவுத்தபால் உறுதிச்சிட்டையின் பிரதி என்பவற்றை தயார்நிலையில் வைத்திருத்தல் பயன்தரக்கூடியதாகும். பரீட்சைக்குத் தோற்றவுள்ள விண்ணப்பதாரர்களால் தமது கையொப்பம் சான்றுபடுத்தப்பட்ட அனுமதி அட்டையை பரீட்சை நிலைய மேற்பார்வையாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டையை சமர்ப்பிக்கத் தவறுகின்ற பரீட்சாத்தி பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்.

(ஆ) சாதாரண வர்த்தமானி அறிவித்தலின் I ஆம் பகுதியின் (II அ) பந்தியில் வெளியிடப்பட்டுள்ள பரீட்சார்த்திகளினால் கடைப்பிடிக்க வேண்டிய விதிக் கோவையின் பால் விண்ணப்பதாரிகளின் அவதானம் கோரப்படுகின்றது.

(இ) பரீட்சை சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பிக்கும் மொழி மூலத்தினை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

(ஈ) இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப் படுகின்ற பரீட்சைகளின் போது பரீட்சார்த்தியின் ஆள் அடையாளத்தை பரீட்சை மண்டப மேற்பார்வையாளருக்கு உறுதிப்படுத்துவதற்காக பின்வரும் ஆவணங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை
(ii) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு.

(உ) பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான தகைமைகளைக் கொண்டுள்ளமை ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதலாகாது.

(ஊ) பரீட்சைகளை நடாத்துவது சம்பந்தமாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டங்கள் விதிகளுக்கு பரீட்சார்த்திகள் இணங்கி நடப்பதற்கு பணிக்கப்படுகின்றனர். இவ்விதிகளை மீறுகின்ற பரீட்சார்த்தி பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாகுவார்.

(எ) மேற்படி 08 ஆம் பந்தியின் படி தகைமை பெற்ற விண்ணப்பதாரிகளில் நிலவும் வெற்றிடங்களுக்கு சமமான எண்ணிக்கை உள்ளடக்கப்பட்டு மொத்தப் புள்ளிகளின் திறமை அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பெறுபேற்று பட்டியல் செயலாளர், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு வழங்கப்படும்.

பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சை பெறுபேறுகளை தனிப்பட்ட முறையில் அறிவிக்கப்படுதல் அல்லது www.results.exams.gov.lk என்ற இணைய தளத்தில் வெளியிடப்படுதல் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படும்.

11. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் தாபன ஒழுங்குவிதிகள், அவ்வப்போது அரசாங்க சேவைகள் தொடர்பில் வெளியிடப்படுகின்ற சுற்றறிக்கைகள் மற்றும் இலங்கை கணக்காய்வுச் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் அதற்கு அவ்வப்போது மேற்கொள்ளப் படுகின்ற திருத்தங்களின் நிபந்தனைகள் இப்பதவிக்காக பொருந்தும்.

12. பரீட்சார்த்தி தகமையற்றவர் என கண்டறியப்பட்டால் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சைக்கு பின்னர் தேவையான சந்தர்ப்பத்தில் அவருடைய பரீட்சார்த்தி என்ற தன்மை இரத்துச் செய்யப்படும். பரீட்சார்த்தியால் வழங்கப்பட்ட விபரங்கள் அவர் அதனை பிழையானவை எனத் தெரிந்துகொண்டே சமர்ப்பித்துள்ளார் என நிரூபிக்கப்பட்டால் இல்லாவிடின் அவர் ஏதும் முக்கிய விடயமொன்றை வேண்டுமென்றே மறைத்துவிட்டார் எனக் காணப்பட்டால், அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

13. அனைத்து வெற்றிடங்களையும் அல்லது அதில் ஒரு பகுதியினை மாத்திரம் நிரப்புவதற்கு அல்லது நிரப்பாது விடுவதற்குரிய தீர்மானம் அரசாங்க வேைகள் ஆணைக்குழுவிற்குரியதாகும்.

14. இந்த அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி பெயர்ப்புகளிற்கிடையே எவையேனும் இணக்கமின்மைகள் காணப் பட்டால் சிங்கள அறிவித்தலின் விடயங்கள் சரியானவை எனக் கருதி நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறேன்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

எச்.ஏ.எஸ். ஸமரவீர,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்,
இல. 306/72, பொல்துாவ வீதி,
பத்தரமுல்ல,
2014, ஒகத்து 1.

[ ]
(அலுவலக பாவனைக்கு மட்டும்)

மாதிரி விண்ணப்பப் படிவம்

இலங்கை கணக்காய்வுச் சேவையின் வகுப்பு II தரம் II இல் கணக்காய்வு அத்தியட்சகர்களை சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2014

OPEN COMPETITIVE EXAMINATION FOR RECRUITMENT OF SUPERINTENDENTS OF AUDIT CLASS II GRADE II OF THE SRI LANKA AUDIT SERVICE - 2014

வர்த்தமானி அறிவித்தலின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மொழி :

(விண்ணப்பித்த மொழியினை பின்னர் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது)

(சிங்களம் - 2/ தமிழ் -3/ ஆங்கிலம் -4) [ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

நீங்கள் விண்ணப்பிப்பது வர்த்தமானி அறிவித்தலின் பந்திகள் 02(ஆ)(1) இலிருந்து (8) வரை எனில் 1 எனவும் பந்திகள் 02(ஆ)(9) இலிருந்து (12) வரை எனில் 2 எனவும் கூட்டினுள் எழுதுக. [ ]

1. பெயர் :
   1.1 முதலெழுத்துக்களைக் கடைசியில் குறிப்பிட்டு முதலெழுத் துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
   உ+ம் : GUNAWARDHANA, M.G.B.S.K

   1.2 முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

   1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2. நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

   2.1 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :----.

   2.2 தொலைபேசி இலக்கம் :----.

   2.3 அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
   (அனுமதி அட்டையை அனுப்பிவைப்பதற்காக)

2.4 அலுவலக முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :----.

(அரசாங்க சேவை/ மாகாண அரசாங்க சேவை/ கூட்டுத் தாபன சேவை ஆகியவற்றில் உள்ள உத்தியோகத்தர் அவரின் அலுவலக முகவரியைக் குறிப்பிடுதல் வேண்டும்)

3. பால் (பெண் -1, ஆண் -0)
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

4. தேசிய அடையாள அட்டை இல :

5. தேசிய இனம் :-
(சிங்களவர் - 1, தமிழர் - 2, இந்தியத் தமிழர் - 3, முஸ்லிம் - 4 ஏனையோர் - 5)

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

6. 6.1 விவாக நிலை (விவாகமானவர்-2, தனியாள்-1)
(உரிய லக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

6.2 பிறந்த திகதி :

ஆண்டு மாதம் திகதி

6.3 2014 செப்தெம்பர் 12 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் மாதங்கள் நாட்கள்

7. வர்த்தமானி அறிவித்தலின் 02(ஆ)(1) இலிருந்து (8) வரையிலான பந்திகளின் கீழ் இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் பின்வரும் விபரங்களை வழங்குதல் வேண்டும்.

இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமையுடையவராவதற்குப் பெற்றுக்கொண்ட தகைமையைக் குறிப்பிடவும்.

| (1) பெற்றுக் கொண்ட தகைமை | (2) அந்த தகைமையைப் பெற்றுக் கொண்ட திகதி | (3)தகைமையைப் பெற்றுக் கொண்ட நிறுவனம் |
|---|---|---|
| | | |

8 வர்த்தமானி அறிவித்தலின் 02(ஆ)(9) இலிருந்து(12) வரையிலான பந்திகளின் கீழ் இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் பின்வரும் விபரங்களைக் குறிப்பிடவும்.

(i) நீங்கள் சார்ந்திருக்கும் சேவை/ திணைக்களத் தரம் :----.

(ii) அச்சேவையில்/ திணைக்களத் தரத்தில் நீங்கள் நிரந்தர மாக்கப்பட்ட திகதி :-----------------.

ஆண்டு:----. மாதம்:----. திகதி:----.

(iii) 2014, செத்தெம்பர் 12 ஆந் திகதியன்று உங்களது தொடர்ச்சி யான பூரண சேவைக்காலம் :-

வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

(iv) தற்போதைய வகுப்பு/ தரம் :----.

(v) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரியாக இருப்பின், பின்வரும் விபரங்களைத் தருக :

(அ) பட்டம் பெற்ற ஆண்டு :----.
(ஆ) பல்கலைக்கழகம் :----.
(இ) பாடங்கள் :----.
(ஈ) வகுப்பு :----.
(உ) மேல்/ கீழ் :----.
(ஊ) பெறுபேறுகள் வெளியிடப்பட்ட திகதி :----.

(vi) உயர்கல்வி அமைச்சின் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா கற்கை நெறியில் இடைநிலை பரீட்சையில் சித்தியடைந்த திகதி :----.

9. பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் நேர்த்தியாக ஒட்டுக.

(i) இலக்கம் :----. (ii) பணம் செலுத்திய இடம் :----.
(iii) திகதி :----. (iv) செலுத்திய பணம் (ரூபா) :----.

(பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியினை வைத்திருப்பது பின்னர் ஏற்படக்கூடிய பிரச்சினைகளுக்கு முக்கியமாகும்.)

10. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

10.1 இதில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் என்னுடைய அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை உண்மையானவை என்றும் இப்பரீட்சைக்கான கட்டணத்தினைச் செலுத்திய மைக்காக ..................... ஆந் திகதியிடப்பட்ட .................... ........... ஆம் இலக்க பற்றுச்சீட்டை இத்துடன் இணைத்துள் ளேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்ட சட்டங்கள், விதிகளின் பிரகாரம் செயற்படுவதற்கும் உடன்படுகின்றேன். இப்பரீட்சை தொடர்பான நிபந்தனைகளின் பிரகாரம் நான் தகுதியற்றவன் எனக் காணுமிடத்து இப்பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சைக்குப் பின்னர் என்னுடைய பரீட்சார்த்தித் தன்மையை இரத்துச் செய்வதற்காக எடுக்கப்படும் எந்தத் தீர்மானத்திற்கும் நான் உடன்படுகின்றேன்.

10.2 இப் பகுதி வர்த்தமானி அறிவித்தலின் 02(ஆ)(9) முதல் (12) இன் கீழான தகைமைகளைக் கொண்டிருக்கும் விண்ணப்பதாரிகளால் மாத்திரம் நிரப்பப்படல் வேண்டும்.

2014 செப்தெம்பர் 12 ஆந் திகதியில் முழுமையாக 5 வருடங்களுக்குரிய (சேவை அல்லது திணைக்கள ரீதியான பரீட்சைகளில் சித்தியடைதல் நிபந்தனைகளை தவிர்த்து) எல்லாச் சம்பள ஏற்றங்களையும் பெற்றுள்ளேன் என்றும், எவ்வித ஒழுங்காற்று தண்டனைகளுக்கும் (எச்சரிக்கைத் தவிர்த்து) ஆளாகவில்லை என்றும் உறுதியுரைக்கின்றேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

11. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.**- 02(ஆ) (9) முதல் (12) வரையான பந்திகளின் கீழ் தகைமையைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகளுக்காக மாத்திரம்)

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :**
(மேலே 10.2 ஆம் பந்தி தொடர்பாகவும் தற்பொழுது அரசாங்க சேவையில்/ மாகாண அரசாங்க சேவையில் அல்லது நியதிச் சட்ட நிறுவனங்களில் சேவையாற்றுகின்ற திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்காகவும்)

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் ....................................... எனும் பெயருடைய விண்ணப்பதாரி .................................... ஆந் திகதி தொடக்கம் இந்த அலுவலகத்தில் கடமையாற்றுகின்றார் என்றும், அவருடைய வேலையும் நடத்தையும் திருப்திகரமாக இருக்கின்றன என்றும் மேலே 08 மற்றும் 10.2 ஆம் பிரிவுகளில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் அனைத்தும் இந்த அலுவலகத்தில் உள்ள ஆவணங்களின் பிரகாரம் நான் தனிப்பட்ட ரீதியாகப் பரீட்சித்துப் பார்த்தேன் என்றும், அவை சரியானவை என்றும் 2014............மாதம்......... ஆந் திகதி எனது முன்னிலையில் அவர் கையொப்பமிட்டார் என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

சான்றுபடுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
(இறப்பர் முத்திரை மூலம் சான்றுறுதிப்படுத்தவும்).

12. கையொப்பத்தினை உறுதிப்படுத்துதல் 02(ஆ) 01 இலிருந்து 08 வரையான பந்திகளின் கீழ் தகைமையைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகளுக்காக மாத்திரம்)
வர்த்தமானி அறிவித்தலின் 09(II)(ஊ) பந்தியை பார்க்கவும்.

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் .................................. எனும் பெயருடைய விண்ணப்பதாரியை நான் தனிப்பட்ட ரீதியாக அறிந்துள்ளேன் எனவும் அவர், எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பமும் இறப்பர் முத்திரையும்.

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

8-662/2

## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

இஸ்லாமிய சன்மார்க்க அஹதிய்யா, அல்குர்ஆன் பாடசாலை
இறுதிச் சான்றிதழ் பரீட்சை - 2014

(பௌத்த தஹம் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சைக்குச் சமாந்தரமானது)

1. **ஒழுங்கு விதிகளும் பிரமாணங்களும்.**- மேற்படி பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2014 ஆம் ஆண்டு நவெம்பர் மாதத்தில் நடாத்தப்படும். பரீட்சைக்கான பாடங்களும், பாடத்திட்டங்களும் இணைப்பு 01 இல் தரப்பட்டுள்ளன.

2. **பரீட்சை நிலையங்கள்.**- இணைப்பு 02 இல் கூறப்பட்டுள்ள நகரங்களில் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து பரீட்சை நிலையங்கள் நிறுவப்படும்.

ஆயினும் ஏதாவதொரு பரீட்சை நிலையத்திற்குப் போதிய விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்காதபோது குறித்த பரீட்சை நிலையம் இரத்துச் செய்யப்பட்டு அந்த நிலையத்திற்குரிய விண்ணப்பதாரிகள் அண்மையிலுள்ள வேறொரு பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றச் செய்யப்படுவர். பரீட்சை நிலையங்கள் நிறுவப்படும் மாவட்டங்களும் நகரங்களும் உள்ளடக்கிய பட்டியல் இணைப்பு 02 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

3. **ஊடக மொழி.**- இப்பரீட்சை தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் நடாத்தப்படும். எனினும் ஒரு பரீட்சார்த்தி, தான் தோற்றும் சகல பாடங்களுக்கும் இவற்றுள் யாதேனும் ஒரு மொழி மூலம் மட்டுமே தோற்ற முடியும்.

4. **தகைமைகள்.**- இப்பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் இதன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளில் ஏதேனுமொன்றைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

4.1 முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில், பதிவு செய்யப்பட்ட அஹதிய்யாப் பாடசாலையொன்றில் 10 ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களாயிருத்தல் ;

அல்லது

4.2 முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால், அங்கீகரிக்கப்பட்ட சிரேஷ்ட தர அல்குர்ஆன் மத்ரஸா பாடத்திட்டத்தைப் பூர்த்தி செய்த மாணவராயிருத்தல் ;

அல்லது

4.3 இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இஸ்லாம், அரபு ஆகிய பாடங்களில் சித்தியடைந்தவர்களாயிருத்தல்.

**குறிப்பு.**- (1) இப்பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு விண்ணப்பதாரியும், மேலே 4 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்றுள்ளாரென அஹதிய்யாப் பாடசாலையின் அதிபர் அல்லது சிரேஷ்ட அல்குர்ஆன் மத்ரஸா அதிபர் அல்லது பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(2) பரீட்சார்த்தி ஒருவர் இப்பரீட்சைக்குப் பதிவு செய்யப்பட்ட அஹதிய்யாப் பாடசாலை அல்லது சிரேஷ்ட அல்குர்ஆன் மத்ரஸா அல்லது பாடசாலை அதிபர் மூலமே விண்ணப்பிக்க முடியும்.

5. பதிவு செய்யப்பட்ட சகல அஹதிய்யாப் பாடசாலைகள், சிரேஷ்ட மத்ரஸாக்கள், மத்ரஸா பாடசாலைகள் என்பவற்றிற்கு விண்ணப்பப் பத்திரங்களும், அறிவுறுத்தல்களும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பப்பத்திரங்களும், அறிவுறுத்தல்களும் கிடைக்கப்பெறாத நிறுவனங்கள், "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரியுடன் தொடர்பு கொண்டு 2014, ஒகத்து மாதம் 29 ஆந் திகதிக்கு முன் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.-

5.1 விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியினைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்புவதோடு, மற்றைய பிரதியினைக் குறிப்பிட்ட நிறுவனத்தில் கோவைப்படுத்தி வைத்திருத்தல் வேண்டும்.

5.2 விண்ணப்பங்கள் யாவும் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2014, செத்தெம்பர் மாதம் 15 ஆந் திகதி ஆகும்.

5.3 விண்ணப்பப்படிவங்கள் தெளிவாகவும், பிழைகளின்றியும் பூரணப்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறு பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்களும், இறுதித் தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப் படிவங்களும் நிராகரிக்கப்படும்.

5.4 பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை பதிவுத் தபால் மூலம் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்:-

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

5.5 விண்ணப்பங்கள் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது.

5.6 விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இஸ்லாமிய சன்மார்க்க அஹதிய்யா இறுதிச் சான்றிதழ் பரீட்சை 2014" எனவும், பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் நகரமும் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

5.7 விண்ணப்பங்களோடு எவ்வித சான்றிதழையும் இணைத்து அனுப்பக்கூடாது. அஹதிய்யாப் பாடசாலையின் அல்லது சிரேஷ்ட குர்ஆன் மத்ரஸாவின் அதிபர் அல்லது பாடசாலை அதிபர் விண்ணப்பதாரி குறித்த தகைமையைப் பெற்றுள்ளார் என்பதை உறுதிப்படுத்தி இருத்தல் வேண்டும்.

6. **பரீட்சைக் கட்டணம் செலுத்தும் முறை :**

6.1 இப்பரீட்சைக்கு முதற்தடவையாகத் தோற்றும் பரீட்சார்த்தி களிடமிருந்து பரீட்சைக் கட்டணம் அறவிடப்படமாட்டாது. அதன் பின்னர் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு கட்டணம் 150 ரூபா ஆகும். நான சித்தியை பூரணப்படுத்துவதற்கான பாடத்திற்கு பரீட்சைக் கட்டணமாக 50 ரூபா செலுத்துதல் வேண்டும்.

6.2 பரீட்சைக் கட்டணம் செலுத்தவேண்டிய பரீட்சார்த்தி களுக்கான முழுத்தொகையை இலங்கையின் எந்தவொரு அஞ்சலகத் திலாவது செலுத்திப் பெறப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். (பற்றுச் சீட்டின் போட்டோப் பிரதியொன்றினை வைத்திருத்தல் பயனுடையது.)

7. **அனுமதி அட்டைகள்**.- பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் உரிய அஹதிய்யா பாடசாலை அதிபர், அல்லது மத்ரஸா அதிபர் அல்லது பாடசாலை அதிபருக்கு அனுப்பப்படும். அதிபரினால் அவ்வனுமதி அட்டைகள் உரிய பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்பட வேண்டும்.

7.1 ஏதாவதொரு பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றும் ஆரம்ப தினத்திலேயே பரீட்சை அனுமதி அட்டையை பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்கத் தவறும்பட்சத்தில் அல்லது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் குறித் தொதுக்கப்பட்ட பரீட்சை நிலையத்திலல்லாது வேறொரு பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்ற எத்தனிக்கும் பட்சத்தில் உரிய பரீட்சார்த்தியின் பரீட்சார்த்தத் தகமை இரத்துச் செய்யப்படும்.

7.2 அனுமதி அட்டையிலுள்ள விண்ணப்பதாரியின் கையொப்பம் அஹதிய்யாப் பாடசாலை அதிபர், குர்ஆன் மத்ரஸா அதிபர், பாடசாலை அதிபர், அரபுக் கல்லூரி அதிபர், வருட மொன்றிற்கு 2,40,360 ரூபாவிற்கு மேல் திரட்டிய வருடாந்த சம்பளத்தைப் பெறும் நிரந்தர அரச சேவை உத்தியோகத்தர், மஸ்ஜிதுக்குப் பொறுப்பான இமாம் ஆகியோரில் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

7.3 பரீட்சை நடைபெறுவதற்கு ஏழு (7) தினங்களுக்கு முன்னர் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத சந்தர்ப்பத்தில் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த, அஹதிய்யாப் பாடசாலை, குர்ஆன் மத்ரஸா, பாடசாலை என்பவற்றின் அதிபர்கள் இது தொடர்பாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்க வேண்டும். அத்தகைய எல்லாச் சந்தர்ப்பங்களிலும் கீழ்வரும் விடயங்கள் தெரிவிக்கப்படுதல் வேண்டும் :-

(அ) பரீட்சையின் பெயர் :-----.
(ஆ) அஹதிய்யாப் பாடசாலை/ குர்ஆன் மத்ரஸா/ அரசாங்கப் பாடசாலையின் பெயரும் கணினி இலக்கமும் :-----.
(இ) பரீட்சார்த்தியின் முழுப் பெயரும் விலாசமும் :-----.
(ஈ) பரீட்சைக்கு விண்ணப்பித்த நகரம் :-----.
(உ) விண்ணப்பத்தைச் சமர்ப்பித்த தபால் நிலையம் :-----.
(ஊ) பதிவு செய்த இலக்கமும் திகதியும் :-----.

8. **ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்**.- சகல பரீட்சார்த்திகளும் தாம் பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் ஏற்றுக்கொள்ளத்தக்கவாறு தமது ஆளடை யாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதற்கென கீழ்க்குறிப்பிடப்பட்ட அடையாள அட்டைகளில் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

8.1 ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்கள ஆணையாளரினால் வழங்கப்படும் தேசிய ஆளடையாள அட்டை ;
8.2 செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;
8.3 அஞ்சல் அடையாள அட்டை.

9. **பரீட்சை முடிவுகளை வெளியிடலும், சித்திபெற்றமையைத் தீர்மானித்தலும் :**

9.1 இப்பரீட்சைக்குரிய பாடங்கள் நான்கு ஆகும். குறித்த நான்கு பாடங்களிலும் சித்தியடையும் பரீட்சார்த்திகள் மட்டும் இப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களாகக் கருதப்படுவர்.

9.2 ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தி பெற்று ஒரு பாடத்தில் மட்டும் சித்தி பெறத்தவறுவோர் நூன சித்தி பெற்றவராகக் கருதப்படுவார். அவர்கள் அடுத்து வரும் இரண்டு பரீட்சைத் தவணைகளுக்குள் நூன சித்தீப் பாடத்திற்கு மாத்திரம் தோற்றி சித்தி பெற்றால், பரீட்சையில் சித்தி பெற்றவராகக் கணிக்கப்படுவர். (இது 2011 ஆம் ஆண்டுக்குரிய பரீட்சை முதல் நடைமுறைப்படுத்தப்படும்.)

9.3 ஒவ்வொரு பாடத்திற்கும் 100 புள்ளிகள் வீதம் வழங்கப்படும். ஒவ்வொரு பாடத்திற்கும் பெறப்படும் புள்ளிகள் கீழ்க்குறிப்பிட்டவாறு தரப்படுத்தப்படும் :-

| புள்ளி மட்டம் | தரம் | குறியீடு |
|---|---|---|
| 0 - 34 | சித்தியின்மை | F |
| 35 - 54 | சாதாரண சித்தி | S |
| 55 - 69 | திறமைச் சித்தி | C |
| 70 - 100 | விசேட சித்தி | D |

9.4 பரீட்சை முடிவுகளை வெளியிடல்.- பரீட்சை முடிவுகளைப் பற்றிய விபரங்கள் உரிய நிறுவனங்களது அதிபர்களுக்குத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

10. **சான்றிதழ்**.- பரீட்சையில் சித்திபெறும் ஒவ்வொரு பரீட் சார்த்திக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

11. **விடைத்தாள் மீள்பரிசோதனை**.- பரீட்சை முடிவுகள் வெளியாகி 30 நாட்களுக்குள் இத்திணைக்களத்தினால் விநியோகிக்கப் படும் படிவங்கள் மூலம் குறிப்பிட்ட நிறுவனத்தின் அதிபர் விண்ணப்பம் செய்தால் விடைத்தாள்களை மீள் பரிசீலனை செய்வதற்கான வாய்ப்பு வழங்கப்படும். எனினும், இதற்கு உரிய கட்டணம் செலுத்தப்படல் வேண்டும். பரீட்சை முடிவுகளில் மாற்றம் ஏற்படும் பட்சத்தில் மாத்திரமே கட்டணம் மீளளிக்கப்படும். எக்காரணம் கொண்டும் விண்ணப்ப தாரிக்கோ அல்லது அவரது பிரதிநிதிக்கோ விடைப்பத்திரங்களைப் பார்வையிடுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

12. இங்கு குறிப்பிடப்படும் நிபந்தனைகள், அறிவுறுத்தல் களுக்கமைய நடந்து கொள்வதற்கு எல்லா விண்ணப்பதாரிகளும் கட்டுப்பட்டுள்ள தோடு, இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்களிருப்பின் அவை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிவுக்கேற்பத் தீர்மானிக்கப்படும்.

டபிள்யு. எம். என். ஜே. புஷ்பகுமார,
பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

ஒழுங்கமைப்பு, வெளிநாட்டு பரீட்சைகள் கிளை,
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2014, ஓகத்து 1.

**இணைப்பு - 1**

**பரீட்சைக்கான பாடங்களும், பாடத்திட்டமும்**:- இப்பரீட்சை ஒவ்வொரு வினாத்தாள்களும் மூன்று மணித்தியாலங்களைக் கொண்ட நான்கு வினாப்பத்திரங்களையுடையதாகும். வினாப்பத்திரங்களின் கட்டமைப்பும், வினாக்களுக்கான புள்ளி ஒதுக்கீடும் 2004.09.10 ஆந் திகதிய 1358 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கேற்றவாறு அமைந்திருக்கும்.

முதலாம் வினாப்பத்திரம்

1. **அகீதாவும், ஷரீஆவும் (இஸ்லாமிய கோட்பாடும் மூலாதாரங்களும்) அரபு மொழியும்**

1.1 அகீதா பொது விளக்கம் (அல் இலாஹிய்யாத், அந்நுபுவ்வத், அர்ரூஹானிய்யாத், அஸ்ஸம்இய்யாத்)

1.2 அகீதாவின் பிரிவுகள்
- அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத்தின் அகீதா
- ஏனைய அகீதாப் பிரிவுகளிற் சில ஜபரிய்யா, கதரிய்யா, முர்ஜியா முஃதஜிலா, ஷீஆ

1.3 தௌஹீதும், ஷிர்க்கும்
- ஈமானும், குப்றும்
- ரித்தத், நிபாக்
- அல்குர்ஆன் அருளப்பட்டு தொகுக்கப்பட்ட வரலாறு
- சட்ட மூலாதாரம் என்ற வகையில் அல்குர்ஆனின் பயன்பாடு
- ஸுன்னாவின் தோற்றமும் தொகுக்கப்பட்ட வரலாறும்
- சட்ட மூலதாரம் என்ற வகையில் ஸுன்னாவின் பயன்பாடு
- ஹதீஸ் கலை வரலாறும் பிரதான முஹத்திஸ் களின் பங்களிப்புகளும்
- இஜ்திஹாத் பற்றிய விளக்கம்
- துணை மூலாதாரம் என்ற வகையில் இஜ்மா
- துணை மூலாதாரம் என்ற வகையில் கியாஸ்
- பிக்ஹுடைய வரலாறும் பிரதான இமாம்களும்

1.4 அறபு மொழி
- உறுப்பமைய எழுதுதல்
- சிறு வாக்கியங்களை எழுதுதல்
- இஸ்லாம் பாடத்துடன் தொடர்புடைய அறபுச் சொற்களை எழுதுதல்
- முக்கியமான ஸுறாக்களையும், ஆயத்துக்க ளையும், ஹதீஸ்களையும் பிழையின்றி எழுதுதல்.

**இரண்டாம் வினாப்பத்திரம்**

2. **அல் பிக்ஹுல் இஸ்லாமி (இஸ்லாமிய சட்டநெறி)**

2.1 இபாதத் பற்றிய விளக்கம்
- இபாதத்தின் பிரிவுகள்
- தஹாரத்

2.2 நஜீஸும் அதன் வகைகளும்
- நஜீஸை சுத்தப்படுத்தும் முறை
- நீரும் அதன் வகைகளும்
- வுழு, தயம்மும், குளிப்பு பற்றிய நடைமுறை ஒழுங்குகள்

2.3 ஸகாத்
- முக்கியத்துவம்
- விதி முறைகள்
- திரட்டலும் விநியோகமும்
- ஸகாத் மூலம் வறுமைத்தணிப்பும், செல்வப்பங்கீடும்

2.4 நோன்பு
  * முக்கியத்துவம்
  * விதிமுறைகளும் பயனும்

2.5 ஹஜ்
  * முக்கியத்துவம்
  * விதிமுறைகளும் பயனும்

2.6 ஹஜ் நிறைவேற்றும் முறை
  * பர்ளுகள், வாஜிபுகள், சுன்னத்துகள்
  * பர்ளான ஹஜ்ஜுக்கு மேலதிகமாக செய்யும் ஹஜ்கள்

2.7 இஸ்லாத்தின் உணவு, உடை, உறையுள் பற்றிய கண்ணோட்டமும் நடைமுறைகளும்

2.8 ஜிஹாத் பற்றிய விளக்கம்

2.9 குர்பானிகளும் அறுப்பு முறைகளும்

2.10 சத்தியம் செய்தலும் நேர்ச்சையும்

2.11 முஆமலாத் பற்றிய விளக்கம்
  * உழைப்பின் முக்கியத்துவம்
  * பிரதான கொடுக்கல் வாங்கல் (வியாபாரம்) ஏனைய கொடுக்கல் வாங்கல் (உ+ம்: இரவல், வாடகை)
  * வக்பு, வஸிய்யத், வராஸத் (பொதுச்சொத்து, உயில் சொத்து, வாரிசுச்சொத்து)

2.12 இஸ்லாத்தில் ஆண், பெண் நிலை
  * நிகாஹின் விதிமுறைகளும் பயனும்
  * குடும்ப வாழ்வு
  * கணவன்-மனைவி
  * பெற்றோர் - பிள்ளை உரிமைகளும், கடமைகளும் தலாக்கும் இத்தாவும்

2.13 ஜினாயத்
  * ஹுதூத், கிஸாஸ், தஃஸீர்

***மூன்றாம் வினாப்பத்திரம்***

3. **ஸீறாவும் தாரீகும்**

3.1 இஸ்லாத்துக்கு முந்திய அரபு நாட்டின் சமய சமூக நிலை

3.1.1 நபி (ஸல்) அவர்கள்
- நுபுவத்திற்கு முந்திய வாழ்க்கை
  * குடும்பம், பரம்பரை
  * இளமைப்பருவம்
  * நற்குணம்
  * திருமணம்

- நுபுவ்வத்துக்கும் ஹிஜ்ரத்திற்கும் இடையிலான வாழ்க்கை
  * நுபுவ்வத் கிடைத்தல்
  * இஸ்லாமிய பிரச்சாரங்களும் விளைவுகளும்
  * மிஃராஜ்
  * ஹிஜ்ரத்

- மதீனா வாழ்க்கை
  * சமூக அரசியல் செயற்பாடு
  * தற்காப்பு யுத்தங்களும், சமாதான உடன்படிக்கைகளும்
  * இஸ்லாம் பூரணத்துவம் பெறல்.
  * ஸஹாபாக்களின் அந்தஸ்தும் இஸ்லாத்திற்கான அவர்களது பங்களிப்பும்
  * குலபாஉர்ராஷிதீன்கள் வரலாறும், அரசியல் பங்களிப்பும்
  * உமையா, அப்பாசிய ஆட்சிக்காலம்
  * பைத்துல் முகத்தஸ் - வரலாறு
  * இலங்கை முஸ்லிம்களின் வரலாறும் பங்களிப்பும்
  * முஸ்லிம்களின் அறிவியல் பங்களிப்பு
  * பின்வருவோர் பற்றிய வரலாறு
    * இமாம் புகாரி (ரஹ்)
    * இமாம் ஷாபிஈ (ரஹ்)
    * இமாம் கஸ்ஸாலி (ரஹ்)
    * இமாம் அப்துல் காதி ஜீலானி (ரஹ்)
    * இமாம் ஷாதுலி (ரஹ்)

***நான்காம் வினாப்பத்திரம்***

4. **அக்லாக் - (இஸ்லாமிய ஒழுக்கவியல்)**

4.1 அக்லாக் பற்றிய இஸ்லாத்தின் கண்ணோட்டம்
  * அக்லாக் பற்றிய விளக்கம்
  * ஈமானுக்கும் அக்லாக்குக்கும் இடையிலான தொடர்பு
  * அக்லாக்குக்கும் இபாதத்திற்கும் இடையிலான தொடர்பு
  * உளத்தூய்மை (இஃலாஸ்)

4.2 தக்வா
  * வரஉ, ஸுஹ்த்
  * முராகபா, முஹாஸபா
  * ஷவ்க் (இறையன்பு)

4.3 ஈகை
  * தியாகம்
  * நன்றியுணர்வு
  * பொறுமை - சகிப்புத்தன்மை - விட்டுக் கொடுத்தல் - மன்னித்தல்
  * பணிவு
  * நேரம் பேணுதல்
  * அவையவங்களைப் பேணுதல்-நாவு, கண், காது, பாலுறுப்பு
  * பிறரை மதித்தல்
  * நீதியும் நேர்மையும்
  * இளைஞர், யுவதிகளிடம் காணப்பட வேண்டிய சிறப்பான ஒழுக்கப் பண்புகள்
  * ஏனைய சமயத்தவர்களுடன் இணங்கி வாழ்தல்

4.4 இஸ்லாமிய நீதிமுறை

*இணைப்பு - 2*

**குறித்த மாவட்டங்களிலே பரீட்சை நிலையங்கள் ஏற்படுத்தப்படவுள்ள நகரங்களும் அவற்றின் இலக்கங்களும்**

| நகரம் | நகர இல. | மாவட்ட இல. | நகரம் | நகர இல. | மாவட்ட இல. |
|---|---|---|---|---|---|
| **கொழும்பு மாவட்டம்** | | 01 | **கம்பஹா மாவட்டம்** | | 02 |
| கொழும்பு (மத்தி) | 01 | | திஹாரிய | 03 | |
| பம்பலப்பிட்டி | 02 | | மாபோலை | 04 | |
| | | | மல்வானை | 05 | |
| | | | நீர்கொழும்பு | 06 | |
| | | | கல்எலிய | 07 | |
| **களுத்துறை மாவட்டம்** | | 03 | **காலி மாவட்டம்** | | 04 |
| பாணந்துறை | 08 | | காலி | 11 | |
| களுத்துறை | 09 | | | | |
| அழுத்கம | 10 | | | | |
| **மாத்தறை மாவட்டம்** | | 05 | **அம்பாந்தோட்டை மாவட்டம்** | | 06 |
| வெலிகமை | 12 | | அம்பாந்தோட்டை | 14 | |
| மாத்தறை | 13 | | | | |
| **கேகாலை மாவட்டம்** | | 07 | **குருநாகல் மாவட்டம்** | | 08 |
| மாவனல்லை | 15 | | குளியாபிட்டி | 18 | |
| வரகாபொலை | 16 | | குருநாகல் | 19 | |
| கன்னத்தோட்டை | 17 | | மெல்சிறிபுர | 20 | |
| | | | பொல்கஹவெல | 21 | |
| | | | கெகுனுகொல்ல | 22 | |
| **புத்தளம் மாவட்டம்** | | 09 | **அநுராதபுர மாவட்டம்** | | 10 |
| நுரைச்சோலை | 23 | | அநுராதபுரம் | 26 | |
| புத்தளம் | 24 | | கெக்கிராவை | 27 | |
| சிலாபம் | 25 | | கலென்பிந்துனுவெவ | 28 | |
| **பொலன்னறுவை மாவட்டம்** | | 11 | **மாத்தளை மாவட்டம்** | | 12 |
| கதுறுவெல | 29 | | மாத்தளை | 30 | |
| **கண்டி மாவட்டம்** | | 13 | **நுவரெலியா மாவட்டம்** | | 14 |
| கண்டி | 31 | | நுவரெலியா | 35 | |
| நாவலப்பிட்டி | 32 | | | | |
| தெல்தொட்டை | 33 | | | | |
| கெலி ஓயா | 34 | | | | |
| **இரத்தினபுரி மாவட்டம்** | | 15 | **பதுளை மாவட்டம்** | | 16 |
| எஹலியகொடை | 36 | | பதுளை | 38 | |
| பலாங்கொடை | 37 | | வெலிமடை | 39 | |
| **மொனராகலை மாவட்டம்** | | 17 | **அம்பாறை மாவட்டம்** | | 18 |
| பிபிலை | 40 | | அக்கரைப்பற்று | 41 | |
| | | | பொத்துவில் | 42 | |
| | | | கல்முனை | 43 | |
| | | | சம்மாந்துறை | 44 | |
| | | | இறக்காமம் | 45 | |
| | | | நிந்தவூர் | 46 | |
| | | | ஒலுவில் | 47 | |
| **மட்டக்களப்பு மாவட்டம்** | | 19 | **திருகோணமலை மாவட்டம்** | | 20 |
| காத்தான்குடி | 48 | | மூதூர் | 51 | |
| ஏறாவூர் | 49 | | கிண்ணியா | 52 | |
| வாழைச்சேனை | 50 | | திருகோணமலை | 53 | |

| நகரம் | நகர இல. | மாவட்ட இல. | நகரம் | நகர இல. | மாவட்ட இல. |
|---|---|---|---|---|---|
| **வவுனியா மாவட்டம்** | | 21 | **மன்னார் மாவட்டம்** | | 22 |
| வவுனியா | 54 | | மன்னார் | 55 | |
| **முல்லைத்தீவு மாவட்டம்** | | 23 | **கிளிநொச்சி மாவட்டம்** | | 24 |
| முல்லைத்தீவு | 56 | | கிளிநொச்சி | 57 | |
| **யாழ்ப்பாண மாவட்டம்** | | 25 | | | |
| யாழ்ப்பாணம் | 58 | | | | |

8-647

---

## இலங்கை நிர்வாக சேவை அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறமை காண் தடைப் பரீட்சை மற்றும் இலங்கை பொறியியலாளர் சேவை, இலங்கை விஞ்ஞான சேவை மற்றும் இலங்கை கட்டிடக் கலைஞர் சேவை ஆகியவற்றில் உள்ள அலுவலர்களுக்கான இரண்டாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை மற்றும் இலங்கை நிர்வாக சேவை அலுவலர்களுக்கான இரண்டாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை மற்றும் சகல சேவையிலுமுள்ள அலுவலர்களுக்குமான இரண்டாம் மொழிப் பரீட்சை -2014 (I)

இலங்கை நிர்வாக சேவை அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை மற்றும் இலங்கை பொறியியலாளர் சேவை, இலங்கை விஞ்ஞான சேவை மற்றும் இலங்கை கட்டிடக் கலைஞர் சேவை ஆகியவற்றில் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை மற்றும் சகல சேவையிலுமுள்ள அலுவலர்களுக்குமான இரண்டாம் மொழிப் பரீட்சை - 2014 (I), பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கண்காணிப்பு, வழிநடாத்தல் என்பவற்றின்கீழ் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனப் பணிப்பாளர் நாயகத்தினால் 2014, செத்தெம்பர் மாதம் 6 ஆந் திகதி தொடக்கம் 2014, செத்தெம்பர் மாதம் 14 ஆந் திகதிவரை வார இறுதி நாட்களில் கொழும்பில் நடாத்தப்படுவதுடன் இலங்கை நிர்வாக சேவை அலுவலர்களுக்கான இரண்டாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை 2014, ஒற்றோபர் மாதம் நடாத்தப்படும். (பரீட்சை நடாத்தப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்) என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. மேற்படி சேவைகளுக்கு ஏற்புடையதாக நடாத்துவதற்குரிய வினைத்திறன்காண் தடைப்பரீட்சைகள் மற்றும் இரண்டாம் மொழி தொடர்பான பரீட்சைகள் கீழ்குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும் :-

| தொடர் இலக்கம் | பரீட்சையின் பெயர் | குறியீடு |
|---|---|---|
| 1 | இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன் காண் தடைப்பரீட்சை மற்றும் இரண்டாவது மொழிப் பரீட்சை | SLAS 1 |
| 2 | இலங்கை பொறியியலாளர் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன் காண் தடைப்பரீட்சை மற்றும் இரண்டாவது மொழிப் பரீட்சை | SLES |
| 3 | இலங்கை விஞ்ஞான சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன் காண் தடைப்பரீட்சை மற்றும் இரண்டாவது மொழிப் பரீட்சை | SLSS |
| 4 | இலங்கை கட்டிடக் கலைஞர் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன் காண் தடைப்பரீட்சை மற்றும் இரண்டாவது மொழிப் பரீட்சை | SLArS |
| 5 | இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | SLAS 2 |

3. அலுவலர் தாம் விரும்பினால் ஒவ்வொரு பாடத்திற்கு வெவ்வேறாகவும் வெவ்வேறான அமர்வுகளிலும் தோற்றலாம். ஆயினும் விதித்துள்ள காலப்பகுதியில் வினைத்திறமை காண் தடைப்பரீட்சையில் சித்தியடைதல் அத்தியாவசியமாகும்.

4. இப்பரீட்சை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக அவரால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்படிதல் வேண்டும். இச்சட்டதிட்டங்களை மீறினால் ஒழுக்காற்று அதிகாரியால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு ஆளாதல் வேண்டும்.

5. இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு இணையம் ஊடாக (Online) முறையில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.slida.lk என்பதற்கு பிரவேசிப்பதன் மூலம் மட்டுமேயாகும். இணையத்தளத்தின் முகப்புப் பக்கத்தில் வலது பக்கமுள்ள "Apply Online" என்பதை சுட்டுவதன் மூலம் குறிப்பிட்ட பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான விண்ணப்பத்தினைப் பூரணப்படுத்த முடியும். 2014, ஓகத்து மாதம் 15 ஆந் திகதி முதல் மு. ப. 8.00 மணி தொடக்கம் 2014, ஓகத்து மாதம் 29 ஆந் திகதி இரவு 12.00 மணிவரை மட்டுமே விண்ணப்பத்தினைப் பூரணப்படுத்த முடியும்.

*6. **பரீட்சைக் கட்டணங்கள்**.- முதல் முறையாகப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்த வேண்டியதில்லை. அதன் பின்னரான அமர்வுகளில் அலுவலர்கள் பின்வரும் விதத்தில் பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்த வேண்டும். முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை மற்றும் இரண்டாவது மொழித் தேர்ச்சிப் பரீட்சை என்பன ஒரு பரீட்சையாகவும், இரண்டாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை வேறொரு பரீட்சையாகவும் கருதி இலங்கை நிருவாக சேவையிலுள்ள அலுவலர்கள் பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்துதல் வேண்டும். அதற்கிணங்க, முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை மற்றும் இரண்டாவது மொழித் தேர்ச்சிப் பரீட்சையின் ஒன்றுக்கு மேற்பட்ட பாடங்களுக்காக விண்ணப்பிக்கப்படின் 1,000 ரூபா செலுத்தப்படுதல் வேண்டும். இரண்டாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையின் ஒன்றுக்கு மேற்பட்ட பாடங்களுக்காக விண்ணப்பிக்கப்பட்டிருப்பின் 1,000 ரூபா செலுத்தப்படுதல் வேண்டும். முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையின் ஒரு பாடத்திற்காக மட்டும் விண்ணப்பிக்கப்படின் 500 ரூபா செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் இரண்டாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையின் ஒரு பாடத்திற்காக மட்டும் விண்ணப்பிக்கப்படின் 500 ரூபா செலுத்தப்படுதல் வேண்டும்.*

*இலங்கை பொறியியல் சேவை, இலங்கை விஞ்ஞான சேவை மற்றும் கட்டிடக் கலைஞர் சேவையிலுள்ள அலுவலர் முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையின் ஒன்றுக்கு மேற்பட்ட பாடங்களுக்கு விண்ணப்பித்தால் 1,000 ரூபா செலுத்துதல் வேண்டும் என்பதுடன் அவர்கள் ஒரு பாடத்திற்காக மட்டும் தோற்றினால் ரூ. 500 செலுத்தப்பட வேண்டும்.* SLIDA *கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு நாடு முழுவதிலுமுள்ள ஏதேனுமொரு அஞ்சல் அலுவலகத்தில் (உப அஞ்சல் அலுவலகங்கள் நீங்கலாக) மூலம் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டின் இலக்கம் விண்ணபத்தின் உரிய கூட்டில் குறிப்பிடப்படல் வேண்டும்.* SLIDA *கணக்கிற்கு பணத்தினைச் செலுத்துவதற்காக உள்நாட்டு தந்திக் காசுக் கட்டளை விண்ணப்பத்தினை (அ. அ. சி. 85) நிரப்பும்போது* 'SLIDA' *என்பது பெறுநராகக் குறிப்பிடப்பட வேண்டும். அதேவேளை உரிய பரீட்சையின் குறியீட்டுப் பெயரானது பெறுநரின் முகவரிக்கான இடத்தில் குறிப்பிடப்படல் வேண்டும். (பிரிவு 2 இல் குறிப்பிடப்பட்டவாறு குறியீட்டுப் பெயர்கள் அமைதல் வேண்டும்.) மேலும் கணக்கிற்கு பணத்தினை வரவு வைக்கும்போது அனுப்புவராக விண்ணப்பதாரியின் பெயரினையும் அனுப்புபவரின் முகவரிக்கான இடத்தில் விண்ணப்பதாரியின் தே. அ. அ.* (NIC) *இலக்கத்தையும் உள்ளடக்கி விண்ணப்பமானது நிரப்பப்படுதல் வேண்டும்.*

*7. இலங்கை நிர்வாக சேவை, இலங்கை பொறியியல் சேவை, இலங்கை விஞ்ஞான சேவை மற்றும் கட்டிடக் கலைஞர் சேவையிலுள்ள அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை மற்றும் கட்டடக் கலைஞர் சேவையிலுள்ள அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை மற்றும் சகல சேவைகளுக்குமான இரண்டாம் மொழிப் பரீட்சைக்கான பரீட்சை அனுமதி அட்டையைப் பெற்றுக்கொள்ளுதல்.*

*இணைய இணைப்பில் நிரப்பப்பட்ட விண்ணப்பம் சமர்ப்பிக்கும்போது பரீட்சார்த்திகளுக்கு உறுதிப்படுத்தல் இலக்கம்* (Confirmation Number) *ஒன்று வழங்கப்படும் என்பதுடன் பரீட்சார்த்தி பின்னர் எழும் விசாரணைகளுக்காக அதனை வைத்திருத்தல் வேண்டும். உரியவாறு பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பமானது, இணைய இணைப்பில் அனுப்பப்பட்டவுடன் பரீட்சார்த்தி அணுகுவழியினைக் கொண்டிருக்கும் இணையப் பக்கத்தில் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களை பின்பற்றுவதன் மூலம் அவர்களின் பரீட்சை அனுமதி அட்டைகளை பெற்றுக்கொள்வதற்கு பரீட்சார்த்திகளால் இயலும். பரீட்சார்த்தி அனுமதி அட்டையின் அச்சிடப்பட்ட பிரதி ஒன்றினைப் பெறல் வேண்டும் என்பதுடன் உரிய திணைக்களத் தலைவரினால் அல்லது அந்த நோக்கத்திற்காக தலைவரினால் அங்கீகரிக்கப்பட்ட பிரதித் தலைவரினால் சான்றுப்படுத்தி தனது கையொப்பத்தினைப் பெற்றுக்கொள்ளுவதுடன் அதைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு உறுதிப்படுத்திய அனுமதி அட்டையின் பிரதியொன்றை உரிய தனியார் கோவையில் கோவைப்படுத்துவதற்கு ஏதுவாக தமனது திணைக்களத் தலைவருக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.*

*8. இலங்கை நிர்வாக சேவை அலுவலர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சைக்கான அனுமதி அட்டையைப் பெற்றுக்கொள்ளுதல். பரீட்சை அனுமதி அட்டை விண்ணப்பதாரிகளின் மின்னஞ்சல் முகவரிக்கு* (e-mail) *பின்னர் அனுப்பிவைக்கப்படுவதுடன், அவ்விண்ணப்பதாரியின் கையடக்கத் தொலைபேசிக்கு குறுந்தகவலொன்றும்* SMS *அனுப்பிவைக்கப்படும். ஆகையால் சரியான மின்னஞ்சல் முகவரியையும் கையடக்கத் தொலைபேசி இலக்கத்தையும் பரீட்சை விண்ணப்பப்படிவத்தில் பொருத்தமான கூட்டினுள் இடும்போது அவதானத்துடன் செயற்படவும்.*

*9. விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான செய்முறை தொடர்பிலான ஏதேனும் தெளிவூட்டல் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் 011-5980236 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக பெற்றுக்கொள்ளப்பட முடியும்.*

*2014.08.15 ஆந் திகதியிலிருந்து 2014.08.29 ஆந் திகதிவரை வாரத்தின் வேலை நாட்களில் மு. ப. 8.30 மணியிலிருந்து பி. ப. 4.30 மணிவரை இந்த இணைப்பின் ஊடாக தொடர்பாடல் மேற்கொள்ளப்பட முடியும்.*

*10. அனுமதி அட்டைகளைக் கொண்டிருக்கும் அலுவலர்களுக்கு அவர்களால் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஏற்றவாறு கடமை விடுமுறையினை திணைக்களத் தலைவர் வழங்குதல் வேண்டும். விண்ணப்பதாரிகளுக்கு அவர்களின் பரீட்சார்த்தித் தன்மை உறுதிப்படுத்திப் பெறவேண்டியதாக இருந்தால் 011-5980236 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக இதனைச் செய்துகொள்ள முடியும். பரீட்சைக்குத் தோற்றுவதற்காக பரீட்சார்த்திகளுக்கு போக்குவரத்துச் செலவினங்கள் வழங்கப்படமாட்டாது.*

*11. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின்போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும் :-*

(i) *ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;*

(ii) *செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.*

*மேற்படி ஆவணமொன்றைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தியொருவரின் பரீட்சார்த்த உரிமை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனப் பணிப்பாளரின் தற்றுணிபின்படி இரத்துச்செய்யப்படும்.*

12. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் இப்பரீட்சை நடாத்தப்படுவதுடன் ஏதேனுமொரு பரீட்சார்த்தி தமக்கு உரித்தல்லாத மொழிமூலத்தில் பரீட்சைக்குத் தோற்றியுள்ளதாக பின்னர் வெளிவருமாயின் அவரது பரீட்சார்த்த உரிமை இரத்துச்செய்யப்படும்.

13. **பரீட்சைத் திட்டம்**.- ஒவ்வொரு வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைக்கான பாடங்கள் மற்றும் பாடவிதானங்கள் கீழ்குறிப்பிட்டுள்ள வாறாகும் :-

13.1 இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை (2005.11.14 ஆந் திகதிய 1419/3 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை நிர்வாக சேவை பிரமாணக் குறிப்பு இணைப்பு "இ") :

இப்பரீட்சை பின்வரும் பாடங்களைக் கொண்டிருக்கும் :-

| தொடர் இலக்கம் | பாடம் | காலம் | பாட இலக்கம் |
|---|---|---|---|
| 1 | அரசியலமைப்புச் சட்டமும் நிர்வாகச் சட்டமும் | 3 மணித்தியாலங்கள் | 01 |
| 2 | இலங்கையில் சட்டமுறைகள் | 3 மணித்தியாலங்கள் | 02 |
| 3 | குற்றவியற் சட்டமும் சான்றுச் சட்டமும் | 3 மணித்தியாலங்கள் | 03 |
| 4 | நிர்வாகம் | 3 மணித்தியாலங்கள் | 04 |
| 5 | பொருளியல் | 3 மணித்தியாலங்கள் | 05 |
| 6 | சமூகவியல் | 3 மணித்தியாலங்கள் | 06 |
| 7 | ஆங்கிலம் | 3 மணித்தியாலங்கள் | 07 |

13.1.1 அரசியலமைப்புச் சட்டமும் நிர்வாகச் சட்டமும் (பாட இலக்கம் 01).- கீழ்க்குறிப்பிடப்படும் விடயங்களைக் கொண்டமைந்த வினாத்தாளாகும் :-

(i) வரலாற்று ரீதியிலான அபிவிருத்தி அடங்கலாக இலங்கை அரசியலமைப்பின் அமைவும் இரண்டாவது குடியரசு அரசியலமைப்பும்

(ii) நிறைவேற்றுத்துறை, குடியரசின் சனாதிபதி, அமைச்சரவை, பிரதம மந்திரி மற்றும் மத்திய அரசின் திணைக்களங்களும் அரச சேவையும்

(iii) நீதி நிர்வாகம்

(iv) நிர்வாகத்துடன் தொடர்பான நீதிமன்ற நிர்வாகம்

(v) அரச கொள்கைகளுக்கான வழிகாட்டி கொள்கைகளும் அடிப்படைக் கடமைகளும்

(vi) கையளியதிகார வழிச்சட்டம்

(vii) அரசினதும் அரச அதிகார சபைகளதும் பொறுப்புக்கள்

(viii) அடிப்படை உரிமைகள்

13.1.2 இலங்கையில் சட்ட முறைகள் (பாட இலக்கம் 02) :- கீழ்க்குறிப்பிடப்படும் விடயங்களைக் கொண்டமைந்த வினாத் தாளாகும் :-

(i) இலங்கையின் சட்ட வரலாறு

(ii) நீதிமன்ற அமைப்பு

(iii) இலங்கை நீதிமன்ற கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 6)

(iv) 1971 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க நீதி நிர்வாகச் சட்டம்

13.1.3 குற்றவியல் சட்டமும் சான்றுச் சட்டமும் (பாட இலக்கம் 03) :- கீழ்க்குறிப்பிடப்படும் விடயங்களைக் கொண்டமைந்த வினாத்தாளாகும் :-

(i) தண்டனைச் சட்டக்கோவை

(ii) சான்றுக் கட்டளைச் சட்டம்

**குறிப்பு**.- பரீட்சார்த்தியொருவர் மேற்படி 13.1.1, 13.1.2 மற்றும் 13.1.3 இல் குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு பாடத்திற்கும் ஆகக்குறைந்தது 35 வீதப் புள்ளிகளையும் மூன்று பாடங்களின் மொத்தப் புள்ளிகளில் சராசரியாக 40 வீதத்தையும் பெறுதல் வேண்டும்.

13.1.4 நிர்வாகம் (பாட இலக்கம் 04).- கீழ்க்குறிப்பிடப்படும் விடயங்களைக் கொண்டமைந்த வினாத்தாளாகும் :-

(i) அலுவலகங்கள், வெளிக்கள நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல் மற்றும் அமைப்பாண்மை முறைகள்.
(ii) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 2009.02.20 ஆந் திகதிய 1589/30 ஆம் இலக்க அரசாங்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட நடைமுறை விதிகள் மற்றும் தாபன விதிக்கோவையின் பின்வரும் அத்தியாங்கள் :

VI, VII, IX, XI, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII மற்றும் XLVIII.

**குறிப்பு**.- இப்பாடத்திற்காக பரீட்சார்த்தியொருவர் ஆகக்குறைந்தது 40 வீத புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

13.1.5 பொருளியல் (பாட இலக்கம் 05)/சமூகவியல் (பாட இலக்கம் 06) - பரீட்சார்த்திகள் பொருளியல் அல்லது சமூகவியல் ஆகிய பாடங்களில் ஒரு பாடத்திற்கு மட்டும் தோற்றுதல் வேண்டும்.

13.1.5.1 பொருளியல் (பாட இலக்கம் 05) - கீழ்க்குறிப்பிடப்படும் விடயங்களைக் கொண்டமைந்த வினாத்தாளாகும் :-

(i) பெறுமானம், உற்பத்தி விநியோகத்தின் கொள்கைகளின்பால் விசேட கவனத்துடன் பொருளியல் கோட்பாடுகள்
(ii) நிதி, நிதி அலுவல்களும் நிதிக் கோட்பாடுகளும்
(iii) இலங்கை பொருளாதார அமைவு

**குறிப்பு**.- இப்பாடத்திற்காக பரீட்சார்த்தியொருவர் ஆகக்குறைந்தது 40 வீத புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

13.1.5.2 சமூகவியல் (பாட இலக்கம் 06) - இலங்கை பற்றிய முக்கிய கவனத்துடன் பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாத்தாள் :

(i) சமூக அமைவும், அமைப்பாண்மையும் பணிகளும்
(ii) மானிட உறவுகளும், குழுக்களும்
(iii) உறவு முறை, திருமணம் மற்றும் குடும்பம்
(iv) கிராமிய நகர்ப்புறச் சமூகம்
(v) சமூக நிலைகளும் ஏற்றத்தாழ்வுகளும்
(vi) சமூக கட்டுப்பாடு
(vii) கலாசாரம், சமயம், ஒழுக்கம் மற்றும் பெறுமதிகள்

**குறிப்பு**.- இப்பாடத்திற்காக பரீட்சார்த்தியொருவர் ஆகக்குறைந்தது 40 வீத புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

13.1.6 ஆங்கிலம் (பாட இலக்கம் 07) - இப்பாடத்திற்கு ஏற்புடையதான பாடவிதானம் கீழ்குறிப்பிட்டுள்ளவாறாகும் :-

*(i)* ***Listening & Speaking Skills***
The candidate should possess the ability to function effectively in the following language functions :-

- General Greetings and Introductions
- Giving and Getting Information
- Advising, Suggesting and Expressing Opinions
- Describing Events and Situations
- Telephone skills
- Interviewing skills
- Meeting
- Listening and Note taking skills

*(ii)* ***English Grammar***
A suitable level of proficiency on the following forms of grammar in the Spoken and the Written language is expected from the candidate :-

- Tense and Number
- Sentences (Simple/Compound/Complex/Compound Complex)

- Relative Clauses
- Reported Speech
- Adjectives & Adverbs
- Determiners
- Prepositions

*(iii)* ***Writing Skills***

The knowledge on the modern formats and styles of writing is tested in this area of study :

- Internal modes of Communication
- Formal Correspondence skills
- Writing Descriptions/Explanations
- Summary writing skills
- Report writing skills
- Meeting Minutes/Agendas/Invitations
- Comprehension

*(iv)* ***Reading Skills***

Candidate's ability to comprehend a printed text, infer meaning and verbal/written interpretation is expected :

- Reading and understanding the specific and general meaning of a printed text
- Reading and Interpretation (verbal/written)
- Understanding the cohesion and coherence of a passage

**குறிப்பு**.- இப்பாடத்திற்காக பரீட்சார்த்தியொருவர் ஆகக்குறைந்தது 40% மான புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

13.2 இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்களுக்கான இரண்டாம் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை (2005.11.14 ஆந் திகதிய 1419/3 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை நிர்வாக சேவை பிரமாணக் குறிப்பு அத்தியாயம் "ஈ") இப்பரீட்சைக்கான பாடங்கள் கீழ்குறிப்பிட்டுள்ளவாறாகும் :-

| தொடர் இலக்கம் | பாடம் | காலம் | பாட இலக்கம் |
|---|---|---|---|
| 1 | பொருளியலும் சமூகவியற் கொள்கையும் (இலங்கை மீது முக்கிய கவனத்துடன்) | 3 மணித்தியாலங்கள் | 08 |
| 2 | அபிவிருத்தி நிருவாக நடைமுறை (இலங்கை மீது முக்கிய கவனத்துடன்) | 3 மணித்தியாலங்கள் | 09 |
| 3 | முகாமைத்துவமும் அமைப்பு முறைகளும் | 3 மணித்தியாலங்கள் | 10 |
| 4 | அரசாங்க துறையின் நிதி முகாமைத்துவம் | 3 மணித்தியாலங்கள் | 11 |

13.2.1 *பொருளியலும் சமூகவியற் கொள்கைகளும் (இலங்கை மீது முக்கிய கவனத்துடன்) :- (பாட இலக்கம் 08).-* இலங்கையில் பொருளாதாரச் சமூகக் கொள்கைகளை வடிவமைத்து அதை திரிபுறச் செய்யும் காரணிகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாத்தாளாகும். இது இலங்கையின் அண்மைக்கால பொருளாதார, சமூக, அரசியல், வரலாற்றில் பொருளியல் மற்றும் சமூகவியல் கோட்பாடுகளைப் பிரயோகித்தல் தொடர்பானதாக விடயங்களைக் கொண்டமைந்திருக்கும்.

**குறிப்பு**.- இப்பாடத்திற்காக பரீட்சார்த்தியொருவர் ஆகக்குறைந்தது 40% புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

13.2.2 *அபிவிருத்தி நிர்வாக நடைமுறை (இலங்கை மீது முக்கிய கவனத்துடன்) - (பாட இலக்கம் 09).-* இலங்கையின் மீது விசேட கவனம் செலுத்தி பின்வரும் விடயங்களை உள்ளடக்கி அபிவிருத்தி நிர்வாகத்திற்குப் பொறுப்பான நிறுவனங்கள் அவற்றின் இயக்கம் மற்றும் அவற்றிற்கிடையிலான தொடர்புகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாத்தாளாகும் :-

(i) இலங்கையில் அரசாங்க அமைப்பு
(ii) இலங்கை அரசாங்க அமைப்பின் அரசியலமைப்புப் பின்னணி
(iii) மாகாண சபைகளும் உள்ளூராட்சி நிறுவனங்களும்
(iv) மக்கள் அமைப்புக்கள்
(v) அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள்

**குறிப்பு**.- இப்பாடத்திற்காக பரீட்சார்த்தியொருவர் ஆகக்குறைந்தது 40% புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

13.2.3 முகாமைத்துவமும் அமைப்பு முறைகளும்- (பாட இலக்கம் 10).- பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட வினாத்தாளாகும் :-

(i) முகாமைத்துவமும் அமைப்பும் பற்றிய கோட்பாடுகளும்

(ii) அரச துறையில் எழுகின்ற பிரச்சினைகள் மற்றும் விடயங்களுக்கு இக்கோட்பாடுகளைப் பிரயோகித்தல்

(iii) முகாமைத்துவம் பற்றிய நவீன திறமுறைகளும் செயல்நுட்பங்களும்.

**குறிப்பு**.- இப்பாடத்திற்காக பரீட்சார்த்தியொருவர் ஆகக்குறைந்தது 40% புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

13.2.4 அரச துறையின் நிதி முகாமைத்துவம்- (பாட இலக்கம் 11).- பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாத்தாள் ஆகும் :

(i) இலங்கையின் நிதிக் கட்டுப்பாடு-
அரசாங்க நிதி முகாமைத்துவத்திற்கு ஏற்புடைய சட்டப்படியான ஏற்பாடுகள்
அரசாங்க நிதி குறித்து பாராளுமன்றத்தின் கட்டுப்பாடு
நிதியம் என்பதன் கருத்து
திரட்டிய நிதியமும் அதன் செயற்பாடும்
ஒதுக்கீட்டின் நோக்கமும் ஒதுக்கீட்டு முறைகளும்
ஐயத்திற்குரிய நிதியம்
பிற நிதிகளும் அவற்றின் செயற்பாடுகளும்
அரசாங்க வருமானம்
நிதி அமைச்சரின் அதிகாரங்கள், வேலைப்பளு மற்றும் பொதுத் திறைசேரியின் அதிகாரங்கள், வேலைப்பளு
ஆணைச்சீட்டுக்களும் கட்டுநிதிய அதிகாரமும்
கணக்காய்வாளர் தலைமை அதிபதி, அவரின் அதிகாரங்கள் மற்றும் வேலைப்பளு
அரசாங்க செலவினக் குழு
அரசாங்க தொழில் முயற்சிக்குழு

(ii) கணக்கீட்டு அலுவலர்கள், தலைமை கணக்கீட்டு அலுவலர்கள் மற்றும் அரசாங்க வருமானம் தொடர்பாக கணக்கீட்டு அலுவலர்கள் ஆகியோரை நியமித்தல், அவர்களின் அதிகாரங்கள் மற்றும் வேலைப்பளு

(iii) உள்ளகக் கணக்காய்வு

(iv) அரசாங்க செலவுகளைத் திட்டமிடலும் முகாமைத்துவமும்,
அமைப்புக்களின் நோக்கங்கள் மற்றும் கடமை பொறுப்புக்கள் என்பனவற்றை இனங்காணுதல்
அரசாங்கக் கொள்கைகள், குறிக்கோள்கள், இலக்குகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை இனங்காணுதல்
அபிவிருத்திக் கருத்திட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்களைத் திட்டமிடல், தரங்கணிப்பிடல் மற்றும் முன்னுரிமை வழங்குதல்
வருடாந்த வருமான மற்றும் செலவு மதிப்பீடுகளைத் தயாரித்தல், இறுதித் தீர்மானம் எடுத்தல்

(v) அங்கீகரிக்கப்பட்ட செலவு மதிப்பீடுகளில் மாற்றங்களை செய்தல், வீரமொங் திட்டத்தைச் செயற்படுத்தல், அரச துறையின் பதவியணிகள் மற்றும் சம்பளங்களை முகாமை செய்தல், மொத்த ஆகுசெலவு மதிப்பீடுகளும் அவற்றை மீளமைத்தலும், குறைநிரப்பு மதிப்பீடுகள்

(vi) அரச உடைமைகளின் நட்டங்களும் தவிர்வும்

(vii) பல்வேறு கணக்கு அலுவல்கள்

(viii) நிதி முகாமைக்காக வேலைப்பளுவை பொறுப்பளித்தல்

(ix) அரசாங்க நிதிகளின் பொறுப்பும் வங்கிக் கணக்கும் நடைமுறையும்

(x) அரசாங்க விநியோக நடைமுறை.- பொருட்கள், சேவைகள் மற்றும் வேலைகளை பெற்றுக்கொள்ளல், கேள்வி சபைகள் மற்றும் தொழிநுட்ப தரங்கணிப்பு குழுக்களின் அமைவு, நியமன அதிகாரங்களும் வேலைப்பளுவும் கேள்விகளை தரங்கணிக்கும் நடைமுறை, வெளிநாட்டு உதவிகளின் பேரில் செயற்படும் கருத்திட்டங்களின் முகாமைத்துவம்.

**குறிப்பு**.- இப்பாடத்திற்காக பரீட்சார்த்தியொருவர் ஆகக்குறைந்தது 40 வீத புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

13.3 இலங்கை பொறியியலாளர் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை (2013.11.11 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட இலங்கை பொறியியலாளர் சேவைப் பிரமாணக் குறிப்பின் iii ஆவது பின்குறிப்பு), இலங்கை விஞ்ஞான சேவையில் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை (1988.06.07 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட இலங்கை பொறியியலாளர் சேவைப் பிரமாணக் குறிப்பின் "அ" பந்தி) மற்றும் இலங்கை கட்டிடக் கலைஞர் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை, (1995.08.31 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட இலங்கை கட்டிடக் கலைஞர் சேவைப் பிரமாணக் குறிப்பின் ii ஆவது பின்குறிப்பு).

இப்பரீட்சைக்கான பாடங்கள் கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறாகும் :

| பாடம் | காலம் | பாட இலக்கம் |
|---|---|---|
| நிதி முறைமைகள் | 3 மணித்தியாலங்கள் | 12 |
| நிர்வாகம் | 3 மணித்தியாலங்கள் | 04 |

13.3.1 நிதி முறைமைகள் (பாட இலக்கம் 12).- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டுள்ள வினாத்தாளாகும் :

(i) அரசாங்க நிதி ஒழுங்கு விதிக்கோவை - பகுதி I (அத்தியாயம் X தவிர)
(ii) நடப்பு ஆண்டின் மதிப்பீடுகள் - உதாரணம் : அவற்றைத் தயாரித்தல், தலைப்புக்கள், நிதி முறைகள் மற்றும் ஒதுக்கீட்டுச் சட்டங்கள்

**குறிப்பு**.- இப்பாடத்திற்காக பரீட்சார்த்தியொருவர் ஆகக்குறைந்தது 40% மான புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

13.3.2 நிர்வாகம் (பாட இலக்கம் 4).- பின்வரும் விடயங்களைக் கொண்டமைந்த வினாத்தாளாகும் :

(i) அலுவலகங்கள், வெளிக்கள நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல் மற்றும் அமைப்பாண்மை முறைகள் ;

(ii) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 2009.02.20 ஆந் திகதிய 1589/30 ஆம் இலக்க அரசாங்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட நடைமுறை விதிகள் மற்றும் தாபன விதிக்கோவையின் பின்வரும் அத்தியாயங்கள் : VI, VII, IX, XI, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII மற்றும் XLVIII

**குறிப்பு**.- இப்பாடத்திற்காக பரீட்சார்த்தியொருவர் ஆகக்குறைந்தது 40% மான புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

13.4 இரண்டாம் மொழிப் பரீட்சை.- (உரிய சகல சேவைகளுக்கும்). இப்பரீட்சை எழுத்து மற்றும் வாய்மூலப் பரீட்சை என இரண்டு பகுதிகளைக் கொண்டதாகும். எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் மட்டுமே குறித்த வாய்மொழிப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். எழுத்துப் பரீட்சையில் சித்தியடைவதற்கு பரீட்சார்த்திகள் குறைந்தபட்சம் 40 வீதமான புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

எழுத்துப் பரீட்சைக்கான பாடங்கள் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும் :-

| பாடம் | காலம் | பாட இலக்கம் |
|---|---|---|
| இரண்டாம் மொழிப் பரீட்சை - சிங்களம் | 2 மணித்தியாலங்கள் | 13 |
| இரண்டாம் மொழிப் பரீட்சை - தமிழ் | 2 மணித்தியாலங்கள் | 14 |
| இரண்டாம் மொழிப் பரீட்சை - ஆங்கிலம் | 2 மணித்தியாலங்கள் | 15 |

குறிப்பு.- சிங்கள மொழி மூலம் சேவையில் நியமனம் பெறுவதற்கு தகைமைகளைப் பெற்ற அலுவலர் தொடர்பில் இரண்டாம் மொழி தமிழ் மொழி ஆவதுடன் தமிழ் மொழி மூலம் சேவையின் நியமனம் பெறுவதற்கு தகைமைகளைப் பெற்ற அலுவலர் தொடர்பில் இரண்டாம் மொழி சிங்கள மொழி ஆகும். ஆங்கில மொழி மூலம் சேவையில் நியமனம் பெறுவதற்கு தகைமை பெற்ற அலுவலர்கள் தொடர்பில் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரண்டு மொழி தொடர்பான பரீட்சைகளில் சித்தியடைதல் வேண்டும்.

14. **இப்பரீட்சை நேரசூசி கீழ்குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும் :-**

| தொடர் இலக்கம் | பரீட்சையின் பெயர் | பாடம் | பாட இலக்கம் | திகதி | நேரம் |
|---|---|---|---|---|---|
| 1 | இலங்கை நிர்வாக சேவையில் உள்ள அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன் காண் தடைப்பரீட்சை | அரசியலமைப்புச் சட்டமும் நிர்வாகச் சட்டமும் | 01 | 06.09.2014 | 9.00-12.00 |
| | | இலங்கையில் சட்ட முறைகள் | 02 | 06.09.2014 | 13.00-16.00 |
| | | குற்றவியற் சட்டமும் சான்றுச் சட்டமும் | 03 | 07.09.2014 | 9.00-12.00 |
| | | நிர்வாகம் | 04 | 07.09.2014 | 13.00-16.00 |
| | | பொருளியல் | 05 | 13.09.2014 | 9.00-12.00 |
| | | சமூகவியல் | 06 | 13.09.2014 | 9.00-12.00 |
| | | ஆங்கிலம் | 07 | 13.09.2014 | 13.00-16.00 |
| 2 | இலங்கை பொறியியல் சேவையின் அலுவலர்களுக் கான முதலாவது வினைத் திறன்காண் தடைப்பரீட்சை | நிதி முறைகள் | 12 | 07.09.2014 | 9.00-12.00 |
| | | நிர்வாகம் | 04 | 07.09.2014 | 13.00-16.00 |
| 3 | இலங்கை விஞ்ஞான சேவை யின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன் காண் தடைப்பரீட்சை | நிதி முறைகள் | 12 | 07.09.2014 | 9.00-12.00 |
| | | நிர்வாகம் | 04 | 07.09.2014 | 13.00-16.00 |
| 4 | இலங்கை கட்டிடக் கலைஞர் சேவையின் அலுவலர்களுக் கான முதலாவது வினைத் திறன் காண் தடைப்பரீட்சை | நிதி முறைகள் | 12 | 07.09.2014 | 9.00-12.00 |
| | | நிர்வாகம் | 04 | 07.09.2014 | 13.00-16.00 |
| 5 | இலங்கை நிர்வாக சேவையில் உள்ள அலுவலர்களுக்கான இரண்டாவது வினைத்திறன் காண் தடைப்பரீட்சை | அரசியலமைப்புச் சட்டமும் நிர்வாகச் சட்டமும் | 08 | பின்னர் அறிவிக்கப்படும் | |
| | | அபிவிருத்தி நிர்வாக முறை | 09 | | |
| | | முகாமைத்துவமும் அமைப்பு முறைகளும் | 10 | | |
| | | அரசாங்கத் துறையின் நிதி முகாமைத்துவம் | 11 | | |
| 6 | உரிய சகல சேவைகளிலுள்ள அலுவலருக்குமான இரண்டாம் மொழிப் பரீட்சை | இரண்டாம் மொழிப் பரீட்சை - சிங்களம் | 13 | 14.09.2014 | 9.00-11.00 |
| | | இரண்டாம் மொழிப் பரீட்சை - தமிழ் | 14 | 14.09.2014 | 11.30-13.30 |
| | | இரண்டாம் மொழிப் பரீட்சை - ஆங்கிலம் | 15 | 14.09.2014 | 14.00-16.00 |

15. வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைக்கு ஏற்புடையதான பாடங்களில் இருந்து சித்தியடையும் தேவையை விலக்களித்தல் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும் :

| பரீட்சை | பாடம் | விலக்களிப்பதற்கு தேவைப்படும் தகைமைகள் |
|---|---|---|
| இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை மற்றும் இரண்டாம் மொழிப் பரீட்சை | அரசியலமைப்புச் சட்டமும் நிர்வாகச் சட்டமும் இலங்கையின் சட்டமுறைமைகள் குற்றவியற் சட்டமும் சான்றுக் கட்டளைச் சட்டமும் | நியாய துரந்தரர் (Barrister), உயர் நீதிமன்றத்தின் வழக்குரைஞர், பல்கலைக்கழகம் ஒன்றில் சட்டம் தொடர்பான பட்டதாரியாக இருத்தல் |
| | பொருளியல்/சமூகவியல் | பொருளியல் அல்லது சமூகவியல் தொடர்பான பட்டதாரியாதல் வேண்டும். |

| *பரீட்சை* | *பாடம்* | *விலக்களிப்பதற்கு தேவைப்படும் தகைமைகள்* |
|---|---|---|
| | இரண்டாம் மொழிப் பரீட்சை - சிங்களம்<br>இரண்டாம் மொழிப் பரீட்சை - தமிழ் | (i) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் முதல் மொழி அல்லது இரண்டாம் மொழியில் சித்தியடைதல்<br>(ii) அரச கரும மொழிகள் திணைக்களத்தின் தொடக்க நிலை அல்லது உயர் மொழி கற்கை நெறியில் சித்தியடைந்திருத்தல்<br>(iii) அரச கரும மொழித் திணைக்களத்தின் புகுமுக அல்லது உயர் நிலை மொழி கற்கை நெறியில் சித்தியைடந்திருத்தல் வேண்டும்.<br>(iv) க. பொ. த. (சா. த.) பரீட்சையின் முதல் மொழி சிங்களம் அல்லது தமிழ் இரண்டாம் மொழியில் சித்தியடைதல் |
| | இரண்டாம் மொழிப் பரீட்சை - ஆங்கிலம் | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழியில் சாதாரண சித்தி அல்லது அதற்கு மேல் மட்டத்தில் சித்தியடைந்திருத்தல் |

**குறிப்பு**.- 2012.01.02 ஆந் திகதியன்று அல்லது அதன் பின்னர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள அலுவலர்கள் அவர்களின் நியமனக் கடிதங்களின் ஏற்பாடுகளுக்கிணங்க வேறு அரச கரும மொழிகளில் தேர்ச்சியினை அடைந்து கொள்வதன் பொருட்டு இப்பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டாம் மொழித் தேர்ச்சிப் பரீட்சைக்காக தோற்றுவதற்கு கேட்டுக்கொள்ளப்பட மாட்டார்கள். ஆனால் 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் வேறு அரச கரும மொழியில் தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

15.1 அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அறிவிக்கப்பட்டதன்படி 2012.07.01 ஆந் திகதி தொடக்கம் 2015.01.01 ஆந் திகதி வரை ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட/செய்யப்படும் இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்கள் இவ்வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்ட தடைப் பரீட்சையில் விடயங்களில் சித்தியடைவது தொடர்பாக 1842/2 ஆம் இலக்க மற்றும் 2013.12.23 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட இலங்கை நிர்வாக சேவைப் பிரமாணக் குறிப்பின்படி சித்தியடையவேண்டிய விடயங்களில் விலக்குப் பெற முடியும்.

| குறித்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் | 2013.12.23 ஆந் திகதிய பிரமாணக் குறிப்பின்படி சித்தியடைய வேண்டிய விடயம் |
|---|---|
| பொருளியல் (முதலாம் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை) | பொருளியல் மற்றும் சமூகவியல் (முதலாம் வினைத்திறன் காண் தடைப் பரீட்சை) |
| சமூகவியல் (முதலாம் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை) | பொருளியல் மற்றும் சமூகவியல் (முதலாம் வினைத்திறன் காண் தடைப் பரீட்சை) |
| அரசாங்கத் துறையின் நிதி முகாமைத்துவம் (இரண்டாம் வினைத்திறன்காண் தடைப் பரீட்சை) | அரசாங்கத் துறையின் நிதி முகாமைத்துவம் மற்றும் கொள்வனவு நடவடிக்கைகள் (முதலாம் வினைத்திறன் காண் தடைப்பரீட்சை) |
| ஆங்கிலம் (முதலாம் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை) | தொடர்பு மொழித் தேர்ச்சி (இரண்டாம் வினைத்திறன்காண் தடைப் பரீட்சை) |

16. **பெறுபேறுகளை வெளியிடுதல்**.- இப்பரீட்சைக்காக விண்ணப்பித்த அல்லது தோற்றிய சகல பரீட்சார்த்திகளினதும் பெறுபேறுகள் பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்படும். இலத்திரனியல் ஆவணம் மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் தொடர்பாக சனாதிபதி செயலாளரினால் வெளியிடப்பட்ட SP/SB/1/13 ஆம் இலக்க மற்றும் 2009.10.13 ஆந் திகதிய சுற்றறிக்கையின்படி அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டிருக்கும் பெறுபேறு அலுவலர்களுக்கு வெளியிடப்பட்டதாக கருதப்பட வேண்டும். அதனால் திணைக்களத் தலைவர்கள் அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டிருக்கும் பெறுபேற்றின் குறித்த பிரதிகளை அலுவலரின் தனியாள் கோவையில் உள்ளடக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். பரீட்சையின் பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கு அனுமதிக்கப்படாது.

*17.* இப்பரீட்சை அறிவித்தல் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப்படுகின்றது. குறித்த மொழிகளின் சொற்களுக்கிடையில் ஏதேனும் இணங்காமை காணப்படின் சிங்கள மொழியின் சொற்றொடர்கள் வலுவிலிருக்கும் என்பதனை கவனத்திற் கொள்ளுதல் வேண்டும்.

*18.* இப்பரீட்சை அறிவித்தலில் ஏற்பாடுகள் அளிக்கப்படாத ஏதேனும் விடயங்கள் தொடர்பில் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு செயலாளரின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

பீ. பி. அபேகோன்,
செயலாளர்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
*2014*, ஓகத்து *1*.

*8-661*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.